பக்கங்கள்:- பத்து
*Registered as a News paper in Sri Lanka*
விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் கரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ரா
ம்
கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 23 | திங்கட்கிழமை (07.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 200

# கூட்டணியின் தலைமையில் மத்தியகுழு பூரண நம்பிக்கை!

## நேற்றைய கூட்டம் அமைதியாக நடந்தது

(நமது நிருபர்)

**தமிழீழ மண்மீட்புப் போரில் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளுடனேயே, அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முக்கியமாக பேச வேண்டும் என்பதை கடந்த தேர்தல்களின் போது நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் பேசி வந்துள்ளேன் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கொழும்பில் நேற்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களின் மத்தியில் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் இரவு 10மணிவரை அமைதியான முறையில் நடைபெற்றது.

சுமார் 8மணித்தியாலங்கள் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய குழு உறுப்பினர்களான திருமதி மங்கையறகரசி அமிர்தலிங்கம், எஸ். தியாகராசா (எஸ்.ரி.ஆர். பிலிம்ஸ்) ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)



கரும்புலிகள் தினத்தில் தலைவர் வே. பிரபாகரன் ஈகச் சுடர் ஏற்றுவதையும், அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## நோர்வேத் தூதுவர் நாளை தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நாளை வன்னியில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அரசாங்கம் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பாகவே இருவருக்கிடையேயும் பேச்சு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான அறிக்கையை சு.ப. தமிழ்ச்செல்வனிடம் சமாதான தூதுவர் வெஸ்பேர்க்கினால் கையளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் சட்ட அங்கீகாரம் குறித்து சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க்கின் கிளிநொச்சி விஜயம் குறித்து விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தற்போது கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் புனரமைப்பு வேலைகளை பார்வையிடுவதற்காகவே அவர் வருவதாகவும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரைபை அவர் இத் தடவை எடுத்து வரமாட்டார் என்றும் தெரிவித்தனர். (த-5)

## கரும்புலி மாவீரர்களுக்கு தலைவர் பிரபா அஞ்சலி


(நமது நிருபர்)

தமிழீழ மண் மீட்புப் போரில் தம் இன்னுயிரை ஆகுதியாக்கி வீரகாவியம் படைத்த கரும் புலி மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வன்னியில் ஈகச் சுடர் ஏற்றி தனது அகவணக்கத்தை செலுத்தினார்.

240 கரும்புலி மாவீரர்களின் திருஉருவப்படங்களை வைப்பதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஐங்கோண நினைவு மண்டபத்தில் முதற்கரும்புலி கப்டன் மில்லர் வீரகாவியம் படைத்த நேரமான மாலை 7.05 மணிக்கு (பழைய நேரப்படி) கரும்புலி மாவீரர்களுக்கு தலைவர் பிரபாகரன் ஈகச் சுடர் ஏற்றி தனது அகவணக்கத்தைச் செலுத்தினார்.

சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த ஐங்கோண நினைவு மண்டபத்தில் ஒரே பார்வையில் படக்கூடிய வகையில் 240 கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

(10ம் பக்கம் பார்க்க)



வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கேதீச்சரம் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. ஆலயத்தின் எழில் மிகு முகப்புத் தோற்றம்.

### மீசாலையில் பருபயங்கரம்

## தந்தையின் கத்திக்குத்தில் மகன் துடிதுடித்துப் பலி!

### மற்றொரு மகன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தந்தையின் கத்திக் குத்துக்கு இலக்கான இரண்டு மகன்களில் ஒருவர் பலியானார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக்கொடூரச் சம்பவம் நேற்று மதியம் சாவகச்சேரி மீசாலையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த லோகேஸ்வரன் சுசிகாந்தன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது அண்ணனான லோகேஸ்வரன் துஷியந்தன் (வயது-20) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

மீசாலையிலுள்ள இவர்களது வீட்டில் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தகராற்றைத் தடுக்க முற்பட்ட வேளை மதுபோதையில் கத்தியுடன் நின்ற தந்தை தனது இரண்டு மகன்கள் மீதும் கத்தியால் குத்தியுள்ளார்.

கத்திக் குத்தினால் படுகாயமடைந்த இரண்டு மகன்மாரும் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு சிறிது

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சிவலய தமிழ்த்தினப் போட்டிமுடிவுகள் வெளியாகின

(வடமராட்சி)

வடமராட்சி வலயமட்ட தமிழ்த் தினப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயா விபரங்கள் வருமாறு:-

### பேச்சு

(பிரிவு-1)

த.பிரியந்தி - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், தி.றஜிதா-வட.இந்து மகளிர் கல்லூரி, யோ.தபீத்தர் - புற்றளை ம.வி.

(பிரிவு-2)

சாயிஜெனனி - வடமராட்சி ம.ம.கல்லூரி, சி.கஸ்தூரி - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ம.காயத்தரி - வட.இந்துமகளிர் கல்லூரி

(பிரிவு-3)

ச.கார்த்திகா-மெதடிஸ்தபெண்கள் கல்லூரி, த.இளங்கோ - உடுத்துறை ம.வி., த.றஜிதா - வடமராட்சி ம.ம.கல்லூரி

(பிரிவு-4)

சி.கஜேந்தினி - வட.இந்து மகளிர் கலலூரி, த.விஜிதா - வடமராட்சி ம.ம. கல்லூரி, பு.சுரேந்தர் - ஹாட்லிக் கல்லூரி

(பிரிவு-5)

அ.தர்சன் - ஹாட்லிக் கல்லூரி, அ.பிருந்தா - வட.இந்து மகளிர் கல்லூரி, ரா. அரவிந்தன் - நெல்லியடி மத்திய கல்லூரி

### கட்டுரை

(பிரிவு-2)

த.அரண்யா - நெல்லியடி ம.ம.வி., ஐ.யோகல்யா - மெதடிஸ் பெ.உ. பாடசாலை, ச.விதுரன் - ஹாட்லிக் கல்லூரி.

பிரிவு-3

இ.பவித்திரா - புற்றளை ம.வி., செ.பாமினி - வல்வெட்டி இ.த.க. பாடசாலை, த.அனுஸ்கா - மெதடிஸ்த பெ.உ..பாடசாலை.

பிரிவு-4

சி.இலக்கியா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அ.யசிந்தா - வட.இந்து மகளிர் கல்லூரி, ப.சுரேகா - தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

பிரிவு-5

க.யசோ - விக்கினேஸ்வராக கல்லூரி, ப.அகல்யா - வல்வை மகளிர் ம.வி., நா.சுபோதினி - தொண்டைமானாறு வீரகத்திபிள்ளை ம.வி.

### பாவோதல்

(பிரிவு-1)

பு.ஆரணி - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், ம.உசாந்தி - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்,சி.தேவகி-துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை

(பிரிவு-2)

க.சோபிகா-மெதடிஸ்த.உ. பாடசாலை,ஜெ.ரம்பா-தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி., அ.றெஜீத்தா-திரு இருதயக் கல்லூரி,கரவெட்டி

(பிரிவு-3)

இ.நிதர்சன்-ஹாட்லிக் கல்லூா|, ப.ரசானி-வல்வெட்டிஇ.த.க. பாடசாலை,பா.தர்மினி-வட.இந்து மகளிர் கல்லூரி

பிரிவு-4

ச.கேதீஸ்வரி-தும்பளை சிவபபிரகாச வித்தியாலயம்,சோ.கிருஷ்ணப்பிரியா- இமையாணன் அ.த.க. பாடசாலை,ப.சிறீஸ்கலா-தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளைம.வி.

பிரிவு-5

ப.யோகாம்பிகை -வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி,ச.சுகன்யா-மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, இ.உமா-வட.இந்து மகளிர் கல்லூரி

### வாசிப்பு

பிரிவு-1

ப.கௌதமன்-உடுப்பிட்டிஅ.மி. கல்லூரி,க.விதுஜா-புற்றளை ம.வி.,ஜெ.சுகன்யா-வல்வை சிவகுரு வித்தியாலயம்

பிரிவு-2

பொ.அபித்தா-வடமராட்சி ம.ம.கல்லூரி,டெ.றெஜிதா-திருஇருதய க்கல்லூரி, ஜெ.தமிழ்நிலா கரணவாய் பொன்னம்பலம்.ம.வி.

### ஆக்கத்திறன்(எழுத்து)

பரிவு-1

உ.விதுஷா-தும்பளைசிவப்பிரகாசம் வித்தியாலயம், கே.கிருத்திகா-நெல்லியடி மெதடிஸ்த மி.த.க. பாடசாலை,சு.சுகன்யா-புற்றளை ம.வி.

### ஆக்கத்திறன்(கதைகூறல்)

பிரிவு-1

பு.நிலக்சி-திருஇருதயக் கலலூரி,ம.மிதுஷா-புற்றளை ம.வி., ந.டினாளன்-மாணிக்கவாசகர் வித்தியாலயம்

### இசையும் அசைவும்

பிரிவு-1

செ.நர்த்தனா-கொற்றாவத்தை அ.மி.க.பாடசாலை,பா.சர்மிளா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்,க.தேனுகா-திருஇருதயக் கல்லூரி

### இசை (தனி)

பிரிவு-2

ந.கோகிலவாணி-வட.இந்து மகளிா கல்லூரி,சு.அரவிந்-நெல்லியடி ம.ம.வித்தியாலயம், சி.மெக்சிபாரதா- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை,

### பாவோதல்

பிரிவு-3

ச.ஜான்சி-சென்.தோமஸ பெ.பாடசாலை,சா மதுசூதனா-வட. இந்துமகளிர் கல்லூரி,ம.சர்மினி-உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி,

பிரிவு-4

ச.கணேஸ்குமார்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,த.திருவாழ்மார்பன்-புற்றளை ம.வித்தியாலயம்,யோ.யோகினி-மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

பிரிவு-4

சி.பிரபாலினி-தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளைம.வி.,த. தனதேனுகா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. சோ.சிந்துஷா-வட.இந்து மகளிர் கல்லூரி

### கவிதை ஆக்கம்

பிரிவு-4

கி.அபிலோஜினி-வடமராட்சி ம.ம.கல்லூரி,சா.சாந்தி-வல்வை மகளிர் கல்லூரி,ந.கார்த்திக்-ஹாட்லிக் கல்லூரி

பிரிவு-5

சோ.ஜெகஜனனி-நெல்லியடிம. ம.வி.,வை.வசிகரன்-விக்கினேஸ்வராக் கல்லூரி,பு.சுஜிதா- வட.இந்து மகளிர் கல்லூரி

### சிறுகதை ஆக்கம்

பிரிவு-4

து.நிதர்சா-உடுப்பிட்டி மகளிரி கல்லூரி,இ.கார்த்திகா-அம்பன் அ.மித.க.பாடசாலை,தே.அஜிதா-இமையாணன்அ.த.க.பாடசாலை

பிரிவு-5

ஆ.அஜந்தி-உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை,கை.சிந்துயா ஞானாசாரியார் கல்லுரி, செ.தர்சிகா - தேவரையாளி இந்துக் கல்லூரி.

### நடனம் தனிநிகழ்ச்சி

பிரிவு - 1

இ. அபிராமி - தும்பளை சிவபபிரகாசம் வித்தியாலயம். த.அன்சுகா - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலம், அ.ஜீவிதா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பிரிவு - 2

பா.ரோகினி - வடஇந்து மகளிர் கல்லூரி, ப.நிஷானி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நா.சுவிதனா - நெல்லியடி ம.ம.வி.

பிரிவு - 3

இ.வரலட்சுமி - வடமராட்சி ம.ம. கலலூரி, வை.துவாரகா - வட இந்து மகளிர் கல்லூரி, க.பிரண்யா - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

பிரிவு - 4

இ. கார்த்திகா - வடஇந்து மகளிர் கல்லூரி, வா.கஜந்தா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அ.பிருந்தா - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வ.செளமியா - தேவரையாளி இந்துக் கல்லூரி.

பிரிவு - 5

யோ.ஜெயதாரணி - வடமராட்சி ம.ம.கல்லூரி, அ.அனுஜா - உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, ச.மைதிலி - நெல்லியடி ம.ம.வி,

### இசை -குழு நிகழ்ச்சி

பிரிவு-2

நெல்லியடி ம.ம.வி ஹாட்லிக கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.

பிரிவு - 1

வட இந்துமகளிர் கல்லூா!, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

### நடனம் - குழுநிகழ்ச்சி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி ம.ம.வி.

### விசேட கூத்து (சிந்து நடை)

விக்கினேஸ்வராக் கல்லூரி, தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம், செம்பியன்பற்று அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலை.

### வில்லுப்பாட்டு

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், விக்கினேஸ்வராக் கல்லூரி.

### நாடகம் (திறந்தபோட்டி)

கரவெட்டி விக்கினேஸ்வராக கல்லூரி, பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயம்.

### குறுநாடக ஆக்கம்

சி.தர்மிளா -ஞானாசாரியார் கல்லூா|, ச.தேவகி - விக்கினேஸ்வராக் கல்லூரி.

### தமிழ்அறிவு வினாவிடைப் போட்டி

கரவெட்டி விக்கினேஸவராக் கல்லூரி, வட. இந்துமகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அ.மெ.மிஷன் கல்லூரி.

### விவாதம்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.

### நாட்டுக்கூத்து (இசைநாடகம்)

பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி., உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி.

### தென்மோடி

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

## விம்பிள்டன் டெனிஸ் போட்டி

# மகளிர் சம்பியன் பட்டம் செரீனா வில்லியம் சுவீகரிப்பு

(கொழும்பு)

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிளடன் டெனிஸ் போட்டிகளின் மகளிர் சம்பியன் பட்டத்தை ''செரீனா வில்லியம் பெற்றுள்ளனர்.

உலகத் தரவரிசையில் 1ம் இடத்தில் உள்ள செரீனா இறுதிப் போட்டியில் தனது சகோதரியான ''வீனஸ் வில்லியம்ஸ்'' 4:6, 6:4, 6:2 என்ற செற்கணக்கில் வென்று இவ்வாண்டுக்கான விம்பிளடன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இதற்காக இவருக்கு ஐந்து லட்சத்து எழுபத்தையாயிரம் ஸ்ரேலிங்பவுண் பணப்பரிசாக வழங்கப் பட்டுள்ளது.


இதேவேளை ஆண்களுக்கான இரட்டையர் போட்டியின் சம்பியன் பட்டத்தைப் சுவீஸ்லாந்து ஜீரர் ''ஜேகன் சோக்மென்'' அனாஸ்ரெலியாவின் ''டெட்வீட்பிறி'' சோடியினர் சம்பியன் பட்டத்தைப் வென்றுள்ளனர்.

இவர்கள் இறுதிப்போட்டியில் தம்மை எதிர்த்து விளையாடிய இந்தியாவின் ''மகேஸ்பூபதி, பெலாரசின், மற்றின், குஜாபுஜை 3:6, 6:3, 7:6, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றி கண்டனர்.இரட்டையர் சம்பியன் ஜோடிக்கு 15,54 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் பணப் பரிசாக வழங்கப்பட்டது.

ஆண்களுக்கான ஒற்றையர் இறுதிப் போட்டியில் விளையாட சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரர் அவுஸ்ரேலியாவின் மார்க் பிலிப்போசியர் தகுதி பெற்றுள்ளனர். இதில் 21 வயது நிரம்பிய பெடரர் மாபெரும் ரெனிஸ் போட்டியொன்றில் இறுதியாட்டத்தில் விளையாட தகுதிபெற்ற முதல் சுவிஸ்லாந்து வீரர் ஆவர்

பெடரர் சாதுரியமாக விளையாடக் கூடியவர் என்றும் பிலிப்போசிஸ் பலத்தைப் பிரயோகித்துப் விளையாடக் கூடியவர் என்றும் விமர்சகர்கள் கருதுவதால் இறுதிப் போட்டி மிக விறுவிறுப்பாக இருக்கும் என கருதப்படுகிறது. (க-68)





புதிய ஜனநாயகக் கட்சியின் 25 ஆவது ஆண்டுவிழா யாழ். பல நோக்குக் கூட் டுறவுச் சங்க மண்டபத்தில், நேற்று நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வின் போது, கட்சியின் மூத்த உறுப்பினர்களையும், மூத்த உறுப்பினர் சிதம்பரனுக்கு கட்சியின் பொதுச் செயலர் பொன்னாடை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். *(படம் - க.பவன்)*

## ஜெயலலிதா அரசுக்கு உயர் நீதிமன்றம் பணிப்புரை

# கைது செய்த அரச ஊழியர்களை உடன் விடுவிக்க உத்தரவு

## பேச்சுமூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ஆலோசனை

(சென்னை)

தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்ட அனைத்து அரச ஊழியர்களையும் உடனே விடுதலை செய்யும்படி உயர் நீதிமன்ற நீதிபதி தினகரன் தமிழ் நாட்டு அரசுக்கு உத்தரவிட்டார்.

ஊழியர் பிரச்சினைகளை பேச்சு நடத்தித் தீர்த்துக் கொள்ளும்படியும் இருதரப்புக்களுக்கும் நீதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் நள்ளிரவு வேளைகளில் கைது செய்யப்பட்டமை குறித்து நீதிபதி ஆச்சரியம் தெரிவித்தார்.

எஸ்மா எனும் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை அரசு ஊழியர்கள் தம் நியாயமான கோரிக்கைகள் மீது நடத்திவரும் வேலை நிறுத்த விடயத்தில் தமிழ் நாட்டு அரசு பிரயோகித்திருப்பதை எதிர்த்து தொழில்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் றிட் மனுவொன்றை தாக்கல செய்திருந்தனர்.

அரச ஊழியர்கள மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜெயலலிதா அரசு அறிவித்த சிலமணி நேரத்தில் 1லட்சம் ஊழியர்களுக்கு மேல் தமிழ் நாடு முழுவதிலும் பணிநீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தொழிற்சங்களின் மனுவை தமது வீட்டில் வைத்தே விசாரித்த நீதிபதி கைதானவர்களை உடன் விடுதலை செய்யம்படி உத்தரவிட்டதுடன் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி தொழிற் சங்கங்களையும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு 7சங்கங்கள் உடனடியாக ஒப்புக்கொண்டன. ஏனைய சங்கங்கள் பின்னர் முடிவெடுக்க விருந்தன.இந்த வேலை நிறுததத்தில் 90 சங்கங்கள் ஈடுப்பட்டிருந்தன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் சுமாா 40ஆயிரம் பேர்வரை உடனடியாகக் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட அரச ஊழியர்கள் அரசுவீடுகளில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் நிலையில் அவர்களை இரவுகளில் கைது செய்யும் நடவடிக்கையை நிறுத்துமாறு சென்னை உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்கு பணிப்புரை விடுத்திருக்கின்றது.

அத்தியாவசிய பராமரிப்புச் சட்டத்தை தமிழக அரசு தவறாகப் பயன்படுத்துகின்றது என்று தொடரப்பட்டுள்ள வழக்கில் கருத்து வெளியிட்ட உயர் நீதிமன்ற நீதிபதி தினகரன் பேச்சுவார்த்தை மூலம அரச ஊழியர்களது போராட்டதிற்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்றும் தமிழக அரசைக் கேட்டிருக்கின்றார். (பி-9)

## அசாமில் வெள்ளம்; 8குழந்தைகள் உட்பட16பேர் பலி

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 8குழந்தைகள் உட்பட 16பேர் உயிரிழந்திருக்கின்

அஸாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்த தால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

வேஷ்பூர் என்னும் இடத்தில் ஆற்றில் சென்றுகொண்டிருந்த படகு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதில் 8பேர் கொல்லப்பட்டார்கள்.

அத்தோடு சோனிப்பூர் என்ற இடத்தில் ஆற்றைக்கடக்க முயன்ற 8குழந்தைகள் உயிரிழந்திருக்கின்றார்கள்.

அஸாம் மாநிலத்தின் பல பகுதிகளோடு தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதால் உயிர்ச்சேதங்கள் மற்றம் ஏனைய சேதங்கள் பற்றிய விபரங்கள் தாமதமாகவே கிடைத்ததாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றன. (பி-9)

## பிளேயரின் செல்வாக்கு பிரிட்டனில் குறைகின்றது

(லண்டன்)

பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் பிரதமர் ரொனிபிளேயருக்கிருந்த வரவேற்பு குறைந்துள்ளதாக அண்மையில் அங்கு இடம்பெற்ற மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை ஆளும் தொழிற் கட்சியிலிருந்தே அவர் மீது குற்றச் சாட்டுக்கள் கிளம்பியுள்ளதுடன் ரொனி பிளேயரின் கொள்கைகள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருவேறு கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக தொழில்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஈராக் மீது தாக்குதல் நடத்திய போது அவர் அமெரிக்காவைப் பின் பற்றியதாக அவரது கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஈராக்கில் பேரழிவு ஆயுங்தங்கள் உள்ளமை இதுவரை நிரூபிக்கப்படாமை பிரிட்டிஷ் பிரதமரை இக்கட்டான நிலைக்குத் தள்ளி உள்ளதாக அந் நாட்டுத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (பி-9)

## காஷ்மீர் பிரச்சினைக்கு நெல்சன் மண்டேலாவின் மத்தியஸ்தத்தைக் கோரலாம்

### பாருக் அப்துல்லா யோசனை

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்க நெல்சன் மண்டேலாவை அழைக்கலாம் என்று முன்னாள் காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றின் போது இக்கருத்தைத் தெரிவித்த அவர் நெல்சன் மண்டேலா பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் நண்பராக இருக்கின்றார் என்று சுட்டிக் காட்டினார்.

நெல்சன் மண்டேலா நம்பிக்கைக் குரியவர் என்றும் எனவே அனைத்து மக்களின நலன்களை கருத்தில் கொண்டு அவரை மத்தியஸ்தம் வகிக்க அழைக்கலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

பாரூக் அப்துல்லாவின் இந்தக் கருத்தை அதே தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் பிரதமர் குஜ்ராலும் காங்கிரஸ் கட்சியின் மக்வத் சிங்கும் ஏற்க மறுத்தனர்.

காஷ்மீர் பிரச்சினையில் 3ம் தரப்பின் ஈடுபாட்டை இந்தியா ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றத்திற்கும் இடம் இல்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் ஒரு பகுதியைக் காஷ்மீர் என்று 1994ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் காக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கருத்தை வெளியிட்டனர். (பி-9)

## அயோத்தியில் மேலும் ஒரு மசூதிவேண்டாம்

# முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடத்தில் புதிதாகக்கட்டலாம்

### ஸ்ரீ ஜயெந்திரர் கருத்து



(புதுடில்லி)

அயோத்தியில மற்றொரு மசூதி கட்ட அவசியம் இல்லை எங்கு தேவைப்படுகிறதோ? எங்கு கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றார்களோ? அங்கு மசூதி கட்டலாம் என்று காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர. சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் சுவாமிகள் வெளியிட்டுள்ள சமரச திட்டம் குறித்து அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்டவாரியம் ஞாயிற்றுக் கிழமை விவாதித்தது. இந்நிலையில் மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

ஊடகமொன்றிற்று அவர் அளித்துள்ளபேட்டியில் அவர் கூறியதாவது,

முஸ்லிம்களுக்கு அயோத்தியில் ஏற்கனவே 8 வழிபாட்டுத்தலங் கள் உள்ளன. இந்நிலையில் அப் பகுதி மக்களுக்கு வேறு மசூதி தேவைப்படாது. மற்றொரு வழிபாட்டுத் தலத்துக்குச்செல்வதற்காக ஏற்கனவே பயன்படுத்திவரும் வழிபாட்டுத் தலங்களை அவர்கள் கைவிட மாட்டார்கள்.

பிரச்சினைக்கு அப்பாற்பட்ட 2.77 ஏக்கர் நிலம் உள்ள இடத்திலிருந்து 18கி.மீற்றர் தூரத்தில் பஞ்ச்கோசி பரிக்கிரமாவுக்கு வெளியே மசூதி கட்ட முஸ்லிம்கள் ஒப்புக் கொள்வார்களா என கேட்கப்படுகின்றது. பஞ்ச்கோசியில் எவ்வித பிரச்சினையும் இல்லை எங்கு தேவைப் படுகிறதோ அங்குதான் மசூதி கட்டப்பட வேண்டும். அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டால் எதிர்காலத்தில் வேறு மசூதி ஏதாவது தகர்க்கப்படுமா என்று வினாவப்படுகிறது. அவ்வாறு யாரும் மசூதியை தகர்க்க மாட்டார்கள் என்றார் ஸ்ரீ ஜயேந்திரர் (பி)

## ஆந்திரவில் மீண்டும் ரயில் விபத்து

(புதுடில்லி)

ஆந்திராப் பிரதேசத்தில் கடந்த 4நாட்களில் 2-வது முறையாக மீண்டும் நேற்றுக் காலை ரயில் தடம்புரண்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் சிட்டூர் மாவட்டத்தில் பாகாலாபேல்லாடி பக்ஜிஞ்சர் ரயில் வண்டியின் இஞ்சினும் இரண்டு பெட்டிகளும் நேற்றுக் காலை தடம் புரண்டதில் எஞ்சினின் துணை ஒட்டுநர் உயிரிழந்தார் 20 பேர் காயமடைந்துள்ளனர் (9)

## 106 வயதுப் பாட்டிக்கு மீண்டும் கண்பார்வை

(பெய்ஜிங்)

சீனாவில் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட 106வயது மூதாட்டிக்கு மீண்டும் கண்பார்வை கிடைத்துள்ளது.

தெற்குச் சீனாவில் உள்ள ஹெயனான் மாகாணத்தைச் சேர்ந்தவர் இவர் 1896 யூலையில் பிறந்தார் இவரது பெயர் சன்போடா.

இவருக்கு லயன்ஸ் கிளப் இன்ரநஷனல் அமைப்பின் உதவியால் ஹெய்நனான் மருத்துவக் கல்லூரியில் கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சை நடந்தது.

இந்த மருத்துவ மனையில் இச்சிகிச்சை செய்து கொண்ட அதிக வயதானவர் இவர்தான் என்கின்றார் டாக்டர் ஜிங்ஜியாங் கியாங். சன்னுக்கு 77வயது மூத்த மகன் உள்ளார். சன்னின் குடும்ப வழிவாரிசுகளாக 47 பேர் உள்ளனர் பார்வை போனதால் இவர்களைப் பார்க்க முடியாமல் வேதனையில் இருந்தார் அறுவைச் சிகிச்சை காரணமாக 47 பேரையும் தற்போது தெளிவாகப் பார்க்க முடிகின்றது என்றார் சன். (பி-9)

## உலக நாடுகளுடன் மீண்டும் இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்த இஸ்ரேல் விருப்பம்

(ஜெருசலேம்)

உலக நாடுகளுடன் இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்த தமக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரியுள்ளது.

ஜோர்தான், எகிப்து ஆகிய நாடுகளுடன் மீண்டும் ராஜதந்திர உறவை வைத்துக்கொள்ள விரும்புவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. 2000-ம் ஆண்டில் இந்த நாடுகள் இஸ்ரேலுடனான இராஜ தந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டன.

மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலை நாட்ட உரிய முறையில் இஸ்ரேல் செயற்படவில்லையெனத் தெரிவித்தே இந்த நாடுகள் இராஜ தந்திர உறவுகளை துண்டித்துக் கொண்டன.

எனினும் அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் முன்வைத்துள்ள சமாதானத்திட்டத்தை முன்னெடுப்பதானால் உலக நாடுகள் மீண்டும் தம்முடன் உறவு கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் சுட்டிக் காட்டியுள்ளது. (பி-9)

### பொடாச்சட்டத்தைக் கண்டித்து!

## தமிழ் நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள்

(புதுடில்லி)

மறுமலர்ச்சி தி.மு.க தலைவர் வைகோவை பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில்வாடும் நிலையில் பொடாச்சட்டம் தவறாகப் பயன் படுத்தப்படுவதைக் கண்டித்து இந்த மாதம் 11,12திகதிகளில் தமிழ் நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்களை நடத்துவதற்கு ம.தி.மு.க முடிவு செய்துள்ளது.

சென்னையில் 11ஆம்திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தலைமை வகிப்பார் என்று ம.தி.மு.க அவைத்தலைவர் எல்.கணேசன் தெரிவித்தார்.

பொடாச்சட்டம் தவறாகப் பயன் படுத்தப்படமாட்டாது என்று பிரதமர் வாஜ்பாயையும், துணைப்பிரதமர் எல்.கே.அத்வானியும், நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வாக்குறுதிகள் அளித்துள்ள போதிலும்,ஜெயலலிதா அரசு தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக இந்தச் சட்டத்தை தவறாகப் பயன்படுவதுவதாகக் கூறி கண்டிக்கும் தீர்மானத்தை ம.தி.மு.க செயற்குழு நிறைவேற்றியுள்ளது. (பி-9)

## இன்று ஒரு தகவல்

### அறிவு

"வணக்கம்! வாருங்கள்! வாருங்கள். வலதுகாலை எடுத்து வாருங்கள்" யாருக்கு இந்த வரவேற்பு? "உங்களுக்குத் தான் வேறுயாருக்கும்?" எனக்கு என்னமோ பயமாக இருக்கின்றது பயப் படாதீர்கள். உள்ளே வாருங்கள்" ம்...வநது விட்டேன். இப்போது சொல்லுங்கள்... (கோபமாக) "எங்கே போய் விட்டு வருகிறீர்கள்?பார்த்தீரா? இதற்குத்தான் அப்போதே சொன்னேன். பயமாக இருக்கிறது என்று "ஆமாம்.இப்படி தடீரென தலை மறைவாகினால். என்னஅர்த்தம்?" ''அதனாலே இப்ப என்ன நடந்தது" ''என்ன நடந்ததா? இன்று ஒரு தகவல் என்று ஆரம்பித்து தினம் கொஞ்சநாள் என்னென்னத்தையோ சொல்லிக் கொண்டிருந்தீர்களே . ஆமாம். அதைப்பாதியிலே அப்படியே விட்டு விட்டுப்போய்விடுவதா?" ''கைவசம் இருந்தது. இருந்த வரைக்கும் சொன்னேன்" ''உங்கள் கைவசம் ஒன்றும் இல்லை என்ற ரகசியம் எல்லோருக்கும்" தெரியும்.

''அங்கே இங்கே கண்டது,கேட்டது,படித்தது. இதை வைத்துத தானே சொல்லிக்கொண்டிருந்தீர்கள். சொந்த சிந்தை எது?"

ஆமாம்''உண்மையை ஒப்புக்கொள்வதுதான் நல்லவர்களுக்கு அழகு. அதனாலே வழக்கம்போல கடைத்தேங்காயை எடுத்து வழிப பிள்ளையாருக்கு உடைக்க ஆரம்பியுங்கள். ஆரம்பிக்கலாம் என்கின்றீர்களா?"

''ஆமாம். அறிவுக்குப்பயன் படுகின்ற விஷயங்கள் எல்லோருடைய காதிலும் விழுகின்ற மாதிரிச்செய்வது நல்லது தானே. இப்போது உலகத்திலே நிறையப்பேருக்கு அறிவு நிறையவே இருக்கின்றது. அதனாலே தான்ஆபத்து" ''ஏன்?" ''அந்த அறிவைப் பயன்படுத்தி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? ''என்ன செய்கிறார்கள்?" ''மிக நவீனமான வெடிகுண்டுகள் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது எதற்கு?"

இதைத்தான் நானும் கேட்கிறேன். இப்படிவெடிகுண்டுகள் தயார் செய்வதற்கு தேவைப்படும் பணத்தை ''யுனெஸ்கோ" நிறுவனத்திற்குக் கொடுத்தால் உலகத்திலே எல்லோருக்கும் கல்வி அறிவை உண்டாக்கிவிடலாம் என்றுபல பெரியார்கள் கூறுகிறார்கள். ''நல்ல யோசனைதான். இருந்தாலும் எனக்கு அதிலும் ஒருபயம்?" ''என்ன பயம்?''அப்படி உலகததிலே எல்லோரையும் அறிவாளிகளாக ஆக்கிவிட்டால் என்ன ஆகிவிடும் தெரியுமா?" ''என்ன ஆகிவி டும். ஆளுக்குஆள் வெடிகுண்டு தயார்பண்ண ஆரம்பித்து விடுவார்கள்" ''அப்படியென்றால் உலகத்திற்கு அறிவாளிகளாலேதான் ஆபத்து என்று சொல்கிறீர்களா?" ''அறிவாளி தவறான வழியிலே பயன்படுத்தினால் ஆபத்து அதிகம் என்று சொல்கிறேன்" ''அது உண்மை தான். ஐக்கிய நாடுகள் சபையிலே ஆயுதத்தடை நிலையம் ஒன்று இருக்கின்றது. அங்கேஇருந்த டாக்டர் பைசண்ட்படேல் என்பவர் என்ன கூறினார் தெரியுமா? ஒருபோர் விமானம் தயார்செய்வதற்கு 50கோடி டொலர் செலவாகின்றது. இந்தப்பணத்தை உலக நல்வாழ்வு ஸ்தாபனத்திற்கு கொடுத்தால் இந்தஉலகத்திலே மலேரியா, தொழுநோய், சருமநோய்இதெல்லாம் இல்லாமலே ஆக்கிவிடலாம். அப்படியென்று அவர் சொன்னார்.

கேட்பதற்கு நன்றாகத்தான் உள்ளது. இருந்தாலும் கொடுப்பதற்கு மனம் வேண்டுமே. அந்தமனம் எப்போது வரும்? ''தனலத்தை முழுதாக தியாகம் செய்தால்தான்வரும். பெரியவர்கள் எல்லாம் என்னசொல்கின்றார்கள் தெரியுமா?

தன்னலத்தை முழுக்கத் தியாகம் பண்ணுவது தான் ஸநாதன தர்மத்தின் இலட்சியம் என்றுசொல்கின்றார்கள். சொத்து சுதந்திரங்களை நாமே வைத்திருந்து அனுபவிப்பதிலுள்ள சுகம் தற்காலிகமானது. இந்த உடைமைகளை நாம் வைத்திருந்து அனுபவிப்பதைவிட கொடுத்து அனுபவித்தால் அதுவே பரம ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. சாசுவதமான சௌக்கியத்திற்கும் வழிகோலுகின்றது, என்று பெரியவர்கள் சொல்கின்றார்கள்.

கொடுப்பதிலேயே உண்மையிலேயே நிறைய பெரியவிஷயம். இருந்தாலும்கொடுத்தேன், கொடுத்தேன் என்றுசொல்லிபடம் படிப்பது, பேப்பரில் போடுவதுதான் இப்போதுஅதிகமாக இருக்கின்றது. கொடுத்துவிட்டு கொடுத்தேன் எனும்எண்ணத்தை மட்டும் வைத்து இருந்தால்அந்த அகங்காரம் தியாகத்தாலும், தானத்தாலும் கிடைக்கும் ஆத்மதிருப்தியை அப்படியே ஏப்பம் விட்டுவிடும்.

தியாகம் செய்யத்தான்வேண்டும். அதைவிட முக்கியமாக தியாகம் செய்தேன்என்ற எண்ணத்தையும் தியாகம் பண்ணிவிட வேண்டும் இதுபெரியவர்கள் கருத்து. பரவாயில்லை. கடைத் தேங்காயை எடுத்துவழிப்பிள்ளையாருக்கு உடைத்தாலும் இன்றைக்குப் பெரிய கடையாப் பார்த்துதேங்காயை எடுத்திருக்கிறீர்கள். உடைததற்குப் பலன் இருக்குமா? உடனடியாக பலன் கிடைத்து விட்டது. எப்படிநான் அறிவாளியானேன். அப்படியென்றால் உங்களிடம் ஓர்முக்கியமான வேண்டுகோள்-என்னவேண்டுகோள். வீட்டுக்குள்ளேயே வெடிகுண்டு தயார்பண்ணலாமா என்று யோசிக்க ஆரம்பித்து விடாதே.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# முஸ்லிம் மக்களுக்கும் அரசியலுக்கும் தேர்தல் தொடர்பு மட்டுமே

## வீடமைப்பு பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்குப் பகுதி முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முஸ்லிம் அமைபபுக்கள் ஊடாக சா்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப்பிரதி அமைச்சருமான வசீர் சேகுதாவும் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளை நேற்றுமுன் தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில், இதற்கேற்றவகையில் முஸ்லிம் புத்திஜீவிகளும், முஸ்லிம் அமைப்புகளும், முஸ்லிம் அரசியல் மற்றும் தலைமைத்து வங்களுடன் இணைந்து நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கும், அரசியலுக்கும்இடையிலான தொடர்பு தேதல் காலத்தொடர்பாக மட்டுமே காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டமுஸ்லிம் மக்களின் விவசாயக் காணிகள் தொடர்பாக உண்மைக்குட் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இச்செய்திகளை நம்பி முஸ்லிம் மக்கள்ட தப்பான வழிகளில் சென்று விடக்கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (தி)

# சட்டவிரோத ஆயுத தொழிற்சாலை திவுலப்பிட்டியவில் கண்டுபிடிப்பு

## பொலிஸாரின் திடீர் வேட்டையில் 6 பேர்கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான ஆயுதங்களை தயாரிக்கும் தொழிற்சாலை திவுலப்பிட்டியாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், குறிக்கப்பட்ட பகுதியில் ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று சட்டவிரோதமான முறையில் செயல்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று அப பகுதியை திடீரென சுற்றிவளைத்தது.

இச்சுற்றிவளைப்பின்போது துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டுகள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவம் தொடாபாக 06 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 பேரும் விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-10)

## இராசி பலன்

**07. 07. 2003**

**(ஆனி 23, திங்கள்)**

| | |
|---|---|
| அட்டமி | பி.ப3.12 வரை |
| அத்தம் ந.ப | 11.04 வரை |
| இராகுகாலம் | 7.28-8.58 வரை |
| சுப நேரம் | 11.58-1.28 வரை |

**மேடம்**
புதய முயற்சி, எடுத்த கருமங்கள் கைகூடும, சகோதரரால் நன்மை, சத்துரு ஜெயம்.

**இடபம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு, குடும்பக் கவலை, கடும் வார்த்தை.

**மிதுனம்**
மாணவர் கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், கற்பனை மிகுதி, புத்தி சாதுரியம்.

**கடகம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள் செயற்கை, நல்ல சம்பவம் வாக்கு மேன்மை.

**சிங்கம்**
மாதர் நட்பு, பொருள் விரயம், எடுத்த கருமங்கள தாமதம் ஆகும், கௌரவக் குறைவு.

**கன்னி**
நல்ல முயற்சி, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்.

**துலாம்**
பிதாச் சிந்தை, கோவப்படுதல், முயற்சி தாமதம், சுபசெலவு.

**வ்ருச்சிகம்**
தெய்வ சிந்தை, மனமகிழச்சி,பெருமையான சம்பவம், அதிக வருமானம்.

**தனுசு**
சுப நிகழ்வு, கடின உழைப்பு ,அதிகாரம், முயற்சி கைகூடும்.

**மகரம்**
தொழில் விருத்தி, புதிய முயற்சி, வீண்பயம, ஆன்றோர் மதிப்பு.

**கும்பம்**
எதிர்பாராத அதிசயம்,முயற்சி தாமதம், நண்பர்கள் விரோதம் பிரயாணம்.

**மீனம்**
திடீர்ப்பயணம்,நல்ல வரவேற்பு, குடும்பத்தில் நல்ல காரியம், தன லாபம்.
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## சீதுவை காணி விவகாரம்

## ஜனாதிபதி-பிரதமர் முறுகல் நிலை

(கொழும்பு)

சீதுவையில் உள்ளமூன்று ஏக்கர் காணியை பயன்படுத்துவது குறித்து ஜனாதிபதிக்கும். ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் முறுகல்நிலை தோன்றியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல்வெளியிட்டுள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியமுன்னணியின் பொருளாதார செயற்திட்ட கமிட்டியின் தீர்மானத்தின்படி, சீதுவையில் ஆஸ்பத்திரி கட்டுவதற்கென உத்தேசிக்கப்பட்ட மூன்றுஏக்கர் காணியின் அருகிலுள்ளவேறொரு காணியானது 60 வருட குத்தகையில் தொழிற்சாலை ஒன்றுஅமைப்பதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது விடயத்தில், சந்தேகம் கொண்ட ஜனாதிபதி, இதுபற்றி பூரணஅறிக்கையொன்றைத் தெளிவாகச் சமர்பிக்கும்படி ஐக்கிய தேசிய முன்னணியை கோரியுள்ளார்.

இதனால் ஐக்கியதேசியமுன்னணி அரசின் தலைமைப்பீடம் பெரும் அதிருப்திநிலைஅடைந்துள்ளதாகவும் இந்நிலைமையானது பிரதமர் ரணில-ஜனாதிபதி உறவுநிலையில மேலும் விரிசலை ஏற்படுத்தக்கூடும் என ஐ.தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்துளளன. (க-ச)

## சப்ரகம, ஊவா மாகாணம் வெள்ள அனர்த்தம் பற்றிய முக்கிய கூட்டம் கொழும்பில்

(கொழும்பு)

தெற்கு மத்திய சப்பிரகமூவா மற்றும் ஊவாமாகாணங்களில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு மற்றும் மண்சரிவு போன்றஅனர்த்தங்கள் பற்றிய முக்கிய கூட்டம் ஒன்று அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் கருஜெயசூரியா கருத்துத் தெரிவிக்கையில்,

இயற்கை அனர்த்தத்தால் வீடிழந்தோருக்கான வீடமைப்புதொடர்பாக 99நாட்களாக தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக வீடமைப்புத் திட்டநிர்மாணவேலைகள் சம்பிரதாய பூர்வமாக எதிர்வரும் 20ம் திகதி ஆரம்பிக்கவிருக்கின்றன.

கடந்த மேமாதத்தில் ஏற்பட்ட புயல்மழைகாரணமாக 9300வீடுகள் பூரணமாக அழிக்கப்பட்டுள்ளன. 30,000 வீடுகள்பகுதியாக அழிவுக்குள்ளாகின என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இவ்அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்துள்ள 2000 அகதிகளின் அடிப்படைத் தேவைகள் குறைவின்றி நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது எனவும் கூறினார். (க-ச)

# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த அறிக்கை தயாராகிறது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான தீர்மானத்தை அமுல்செய்வதற்கு திறைசேரியினால் அறிக்கைதயாரிக்கப் பூட்டுவருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, சம்பள அதிகரிப்புக்கான நிதி ஒதுக்கிட்டுத் தகவல்களைக்கொண்ட அறிக்கை ஒன்று இந்தவாரம் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் கையளிக்கப் படவுள்ளது.

இதனடிப்படையில், சம்பள அதிகரிப்புத் தொடர்பானஅறிவித்தல் ஒன்றைதாமதமின்றி வெளியிடுமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க நிதியமைச்சரை பணித்துள்ளார்.

அமைச்சரின் இவ்வறிவிப்பு இந்த மாத இறுதிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சம்பள அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் ஓய்வூதியக்காரர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.(தி)

## சிறு விளம்பரம்

**நாடக நூல்கள்**

03.07.2003 வலம்புரியில் வானொலிநாடகம் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நாடக நூல்கள்: 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. எங்கள் நாடு. (7236)


**சமாதானம் என்ற பெயரில் சர்வதேச பாதுகாப்பு வலையுள்**

# புலிகளை சிக்க வைப்பதற்கு அரசு பகீரதப் பிரயத்தனம்

**விடுதலைப் புலிகள் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் எஸ்.தங்கன் எடுத்துரைப்பு**

(கிளிநொச்சி)

**கொழும்பு அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால் சமாதான முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தி எங்களை ''சர்வதேச பாதுகாப்பு வலை'' என்ற அரசியல் சகதிக்குள் எம்மை தள்ளி விழுத்தி மேலும் எம்மை பலவீனப்படுத்துவதேயாகும்.**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கரும்புலிகள்தின நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் எஸ்தங்கன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கவின் நிர்வாகமும் மறைமுகமாக இணைந்து சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கின்றார்கள். இம்முயற்சி ஆபத்தானது. அநியாயமானது. ''விடுதலைட் புலிகள் இயக்கம் சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்ல'' சர்வதேசத் சக்திகள் யாவும் தொடர்ந்தும் கொழும்பு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து சமாதான நடவடிக்கைகள் சம்பந் தமான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள உதவ வேண்டும்.

விடுதலைப்புலிகள் இராணுவ பலத்தோடு இருந்த சமயத்தில் தான் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்து - தற்போது பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் யுத்தமொன்றை ஆடிக்கொண்டிருக்கின்றது. மேலும் நாங்கள் எதிர்பார்ப்பது அரசியல் யாப்பிற்கு அப்பால் நீதியான இடைக்கால நிர்வாகம் ஒன்றினைத்தான்.

''விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தின் போது தமது அரசியல், அமைதிகாத்தல், நிர்வாகத்திறமையை செயல்முறையில் காட்டியுள்ளார்கள், காட்டிவருகின்றார்கள்'' மூன்று படைகளின் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் நாங்கள் மேற்கொள்ளும் உண்மையான, உணர்வு பூர்வமான சமாதான முயற்சிகளுக்கு, பல தடை தூண்டல்களை உருவாக்கி வருவதுடன், எமது உத்வேகத்தையும உறுதிப்பாட்டையும் உருக்குலைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ''போர்தான் சமாதானத்தின தூண்'' என்ற வறட்டு வேதாந்தத்தை சூசகமாக தெரிவிக்கின்றார். ஜனாதிபதியின் ஆத்திரமூட்டும் அராஜகத்தைக் கண்டும் காணாதது போல் இருக்கும் பிரதம மந்திரியின் அசமந்தப் போக்கு, அரசாங்கத்தின் மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை நாசமாக்குகின்றது: இழக்கவும் செய்கின்றது: இந்நடவடிக்கைகளிலிருந்து, சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டிய மகத்தான உண்மையெனில் ''சமாதானத்தின் உண்மையான எதிரியார்?'' என்பதே!

மேலும் அரசாங்கம், இடையிடையே இந்தியா - அமெரிக்கா ஆகியோர்களின் ஆதரவையும், உணர்வுபூர்வமான அன்பையும் பெறுவதற்கு பகீரத முயற்சிகளையும் திறந்த வெளியரங்கில் தீவிர முயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றது.

தற்போதைய அரசாங்கத்திற்கு சமாதானத்தில் உண்மையான நம்பிக்கையும் இதய சுத்தியும் இருக்குமானால் கோளாறுகளும் பிதற்றல்களும் அவசியம் தானா? என்றார். (க)

## ஆலயத்தில் கத்திக்குத்து

(நெல்லியடி)

கரவெட்டி தெற்கு முங்கோடை முருகன் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது இரு இளைஞர்களுக்களிடையே ஏற்பட்ட தகராறில் இளைஞர் ஒருவர் கத்திக் குத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் கரவெட்டி தெற்கைச் சோதந் ந. சத்தியதாசன் என்பவரே கத்திக்குத்தில் படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகிகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(உ-44)

**நெடுந்தீவு பிரதேச**

## கரும்புலிகள் தின விளையாட்டு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச விளையாட்டுக் கழகங்களின் சமாசத்தினால் நடாத்தப்படட கரும்புலிகள் நினைவு விளையாட்டுப் போட்டிகளின் குழு மற்றும்தனி விளாயட்டுக்களின் முடிவுகள் வருமாறு:-

**கரப்பந்து (ஆண்)**

1ஆம் இடம்- சென் அன்ரனீஸ் வி.கழகம், 2ஆம் இடம் -உதயசூரி யன் வி.கழகம்.

**கரப்பந்து (பெண்)**

1ஆம் இடம்- உதயசூரியன் வி.கழகம், 2ஆம்இடம்- சென்ஜோன்ஸ் வி.கழகம்.

**கிரிகெற் (ஆண்)**

1ம் இடம்- உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம்- சென் அன்ரனீஸ் வி.கழகம்.

**கிரிக்கெற் (பெண்)**

1ம் இடம்- சென்ஜோன்ஸ் வி.கழகம், 2ம் இடம்- ஸ்ரார் வி.கழகம்

**உதைபந்தாட்டம்**

1ம் இடம் -செனஜோன்ஸ் வி.கழகம, 2ம் இடம் -உதயசூரியன் வி.கழகம.

**வலைப்பந்தாட்டம்**

1ம் இடம் -சென்ஜோன்ஸ் வி.கழகம், 2ம் இடம- சென்அன்ரனீஸ் வி.கழகம்.

**கபடி (ஆண்)**

1ம் இடம் -சென் அன்ரனீஸ் வி.கழகம், 2ம் இடம- சென்ஜோன்ஸ வி.கழகம்.

**கபடி (பெண்)**

1ம்இடம்-சென் அன்ரனீஸ வி. கழகம, 2ம் இடம்- ஸ்ரார் வி.கழகம்.

**எல்லே (ஆண்)**

1ம் இடம்- சென்அன்ரனீஸ் வி.கழகம், 2ம் இடம் -ஸ்ரார் வி.கழகம்.

**எல்லே (பெண்)**

1ம் இடம் -சென் அன்ரனீஸ் வி.கழகம், 2ம் இடம்- உதயசூரியன் வி.கழகம்.

**கிளித்தட்டு (ஆண்)**

1ம்இடம்-சென் அன்ரனீஸ்வி.கழகம், 2ம் இடம் -உதயசூரியன் வி.கழ கம்.

**கிளித்தட்டு (பெண்)**

1ம் இடம் -உதயசூரியன் வி.கழ கம், 2ம் இடம்- சென் அன்ரனீஸ் வி.கழ கம்

**கயிறு இழுத்தல் (ஆண்)**

1ம்இடம்- சென் அன்ரனீஸ்வி.கழ கம், 2ம் இடம் -உதயசூரியன் வி.கழகம்.

**கயிறு இழுத்தல் (பெண்)**

1ம்இடம்-உதயசூரியன்விகழ கம்,2ம் இடம்- சென்அன்ரனீஸ் வி.கழ கம்.

**கொடி விளையாட்டு (ஆண்)**

1ம் இடம் -உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம்-சென்ஜோன்ஸ் வி.கழகம்.

**கொடி விளையாட்டு (பெண்)**

1ம் இடம் -சென்ஜோன்ஸ் வி.கழகம், 2ம் இடம் -சென் அன்ரனீஸ் வி.கழகம்.

**தனி விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்காக நடாத்தப்பட்ட 16போட்டிகளின் முடிவுகள்:-**

**மரதன் (ஆண்)**

1ம் இடம்- சுமணதாஸ், உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம்- அ. இதயராஜன, உதயசூரியன் வி.கழகம், 3ம் இடம்- அ. உதயராஜன், உதயசூரியன் விகழகம்.

**மரதன் (பெண்)**

1ம் இடம் - இ.பிரமகலட்சுமி, ஸ்ரார வி.கழகம், 2ம் இடம் - ச.டன்சியா, உதயசூரியன் வி.கழகம், 3ம் இடம்- நா.சசிகலா , ஸ்ரார் வி.கழகம்.

**நீச்சல் (ஆண்)**

1ம்இடம் - ச.யோகராசா , சென் அன்ரனீஸ் வி.கழகம், 2ம் இடம் - இ.அன்ரன்விமலதாஸ், உதயசூரியன் வி.கழகம், 3ம் இடம்- யா.மரிய ஜெயசீலன், சென்ஜோன்ஸ் வி.கழகம்.

**சைக்கிள் ஓட்டம் (ஆண்)**

1ம் இடம் - அ.இதயராஜன், உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம்- ம.விஜிக்குமாா, சென்ஜோன்ஸ் வி.கழகம், 3ம் இடம் -ம. யூட்குமார், சென்ஜோன்ஸ் வி.கழகம்.

**சைக்கிள் ஓட்டம் (பெண்)**

1ம்இடம்-த. ஹேமதர்சினி , ஸ்ரார்விகழகம், 2ம்இடம்- தி. தனலட்சுமி , ஸ்ரார் விகழகம், 3ம்இடம், டேகொனசலாஜெனி , உதயசூரியன் வி.கழகம்.

**படகோட்டம் (சீனோர் படகு)**

1ம் இடம்- ஆ.யேசு , சென்அன்ரனீஸ வி.கழகம், 2ம் இடம்- இ.திர வியம, சென் அன்ரனீஸ வி.கழகம், 3ம் இடம் -சி.வேதநாயகம், சென் அன்ரனீஸ் வி.கழகம்.

**படகோட்டம் (சுப்பர் படகு)**

1ம் இடம் -டெல்சன் - உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம்- மகாராசா - உதயசூரியன் வி.கழகம், 3ம் இடம்- குமார் - சென்அன்ரனீஸ் வி.கழகம்.

**வண்டில் சவாரி**

1ம் இடம்- ந.மனோகரன் - பல்துறை வி.கழகம், 2ம் இடம் -இ.வசந்தகு மார் - ஸ்ரார் வி.கழகம், 3ம் இடம- செ.கோகுலன் - பல்துறை வி.கழகம்.

**வாச்சுவரித்தல்**

1ம் இடம்-சி.றொபின்சன் குரூஸ் - சென் அன்ரனீஸ் வி.கழகம், 2ம் இடம ச. அருள் சீலன் - சென அன்ரனீஸ வி.கழகம், 3ம் இடம் -ச.யோகரன் - சென் அன்ரனீஸ் வி.கழகம்.

**குதிரைச் சவாரி**

1ம் இடம் ப.கிசோக்குமார் - உதயசூரியன் வி.கழகம், 2ம் இடம் -ச. சிவகு மார் - பல்துறை வி.கழகம், 3ம் இடம்- சே.தயானந் தன் பல்துறை வி.கழகம்.

**தலையணைச் சண்டை**

1ம் இடம்- கு.சிவானந்தன், பல் துறை வி.கழகம்- 2ம் இடம- பி.மைக்கல் லன் - சென்ஜோன்ஸ் வி.கழகம்.

**மாட்டு ஓட்டம்**

1ம் இடம் -இ.வசந்தகுமார் - ஸ்ரார் வி.கழகம், 2ம் இடம் -செ.கோகில ராஜ் ,பல்துறை வி.கழகம், 3ம் இடம- எ.மரியசீலன் - உதயசூரியன் வி.கழகம்.

**முட்டி உடைத்தல்**

1ம்இடம்-ம. யூட்குமார் - சென்ஜோன்ஸ வி.கழகம்,

**கிறீஸ்கம்பம் ஏறுதல்**

1ம் இடம்- ப.விக்ரர், சென ஜோன்ஸ வி.கழகம், ச.நேசன் சென்ஜோன்ஸ் வி.கழகம், பி.டைசன் சென்ஜோன்ஸ் வி.கழகம்,

**இவற்றுடன் பெண்களுக்கான சங்கீதக்கதிரை, வயோதிபருக்கான 100மீற்றர் ஓட்டப்போட்டிகளும் நடைபெற்றன.**

**சங்கீதக் கதிரை**

1ம் இடம்- திருமதி ஆன்மேரி மரியதாஸ், 2ம் இடம் -திருமதி. ஜெசிலொனாட, 3ம் இடம- திருமதி ஆலயம் டேவிட்

**வயோதிபர் ஓட்டம**

1ம் இடம்- ஆ.யேசுதாசன், 2ம்இடம- ம.மத்தியூஸ், 3ம்இடம் ச.மரியதாஸ் (க-68)

## விளையாட்டுச் செய்திகள்

## விம்பில்டன் இரட்டையர் இறுதிக்கு மகேஸ் பூபதி ஜோடி தெரிவாகியது

(புதுடில்லி)

விம்பில்டன் ஆண்களுக்கான இரட்டையர் இறுதி ஆட்டத்தில் விளையாட இந்தியாவின ''மகேஸ் பூபதி'' பெலாரஸ் வீரர் மகேஸ் நிர்னி ஜோடியினர் தெரிவாகி உள்ளனர். இவர்கள் அரையிறுதிப் போட்டியில் இந்தியவீரர் ''லியாண்டக்பேஸ்'' செக்குடியரசின் வீரர் ''டேவிட்றிக்டில்'' ஜோடியை 6:7, 6:4, 7:6, 6:3 என்ற செற்கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, பெண்களுக்கான இரட்டையர் கால் இறுதி ஆட்டம் ஒன்றில் பெல்ஜிய வீராங்கனை ''கிம கிளிக்டஸ்'', ஜப்பான் வீராங்கனை ''ஜசுகியாமியாமா ஜோடியினர் ரஷ்ய வீராங்கனை ''குஷ்நெஸ் சோவா'' அமெரிக்க வீராங்கனை ''மாட்டீனா நவட்டிணலோவா ஜோடியை 4:6, 6:2, 6:4 என்ற செற்கணக்கில் தோற்கடித்து அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் அவுஸ்திரேலியாவின ''மார்க் பிலிப்போசஸ்'' பிரான்சின் ''செபாஸ்சியன் குரோஸ்ரினை 7:6, 63, 63 என்ற நேர் செற்கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். (உ-68)

## கிறிக்கெற்சுற்றுப்போட்டி பற்றீசியன் அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெற்சுற்றுப் போட்டியில் பற்றீசியன் அணி சென்றலைட்ஸ் அணியை வென்று கால் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று முன் தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற போட்டியில் பற்றீசியம் அணி 9விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் சென்றலைட்ஸ் அணியை வெற்றி பெற்றது.

ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் வீசப்பட்ட 27ஓவர்களை சந்தித்து 9 விக்கெற்றுகளை இழந்து 150ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சுரேஸ் 24ஓட்டத்திற்கும், ரஞ்சித் மற்றும் சுஜன் ஆகி யோர் 35 ஓட்டங்களுக்கும் தலா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 25.4 ஓவர் முடிவில் ஒரு விககெற்றை மட்டும் இழந்து 151ஓட்டங்களைப் பெற்று 9விக் கெற்றுக்கள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ்அணியின் முகுந்தன் 50ஓட்டங்களையும், ரஞ்சித் 46ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் சுதர்சன் 30ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (க-68)

## தேசிய விளையாட்டுப் போட்டி 12,13 இல் இறுதிக் கட்டம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படுகின்ற 29வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மேலும் நான்கு விளையாட்டுகளின் இறுதிக் கட்டப் போட்டிகள் வருகின்ற 12, 13ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

பட்மின்ரன், நீச்சல், ஹொக்கி மற்றும் ஜிம்மாஸ்ரிக் போட்டிகளே இவ்வார இறுதியில் நடாத்தி முடிக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

நீச்சல் மற்றும் ஜிம்னாஸ்ரிக் போட்டிகள் சுகததாச விளையாட்டரங்குத் தொகுதியிலும், பட்மின்ரன் போட்டி அரங்கிலும், ஹொக்கிப் போட்டிகள் ஆஸ்ரோ விளையாட்டுத் திடலிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை 2003ம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகள் வருகின்ற ஓகஸ்ட்மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-68)

# அன்றும் இன்றும்

# பிரிட்டிஷ் மகாராணி

பிரிததானிய எலிசபெத் மகாராணி அண்மையில் தனது பதவியேற்பின் 50 ஆவது ஆண்டைக் கொண்டாடி இருந்தார். 50 வருடங்களுக்கு முன்னர் அவர் ஆபிரிக்க நாடுகளில் இளவரசி என்ற முறையில் தன் கணவர் மவுண்ட் பேட்டன் பிரபுவுடன் சுற்றுலா மேற்கொண்டிருந்த போது, தந்தையார் ஜோர்ஜ் மன்னர் காலமானார். உடனடியாகவே பிரிட்டிஷ அமைச்சர்களும் கன்டபரி ஆர்ச் பிஷப்பும் கூடி ஆலோசித்து அவரை அரசியாகப் பிரகடனப் படுத்தினார்கள்.

இளவரசியாக வெளிநாடுகளுக்குப் புறப்பட்ட எலிசபெத், மகாராணியாக நாடுதிரும்பினார்.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் மகாராணியின் முடிசூட்டுவிழா மிக கோலாகலமாக நடைபெற்றது. உலக நாடுகளின் பல்வேறு தலைவர்களும் சென்று விழாவிற் கலந்துகொண்டார்கள்.

இப்பொழுது மகாராணிக்கு 70 வயதுக்கு மேலாகின்றது. அவருக்குப்பின் அவரது மூத்த புதல்வர் சார்ள்ஸ் இளவரசர் அரச பதவிக்கு வருவார். பிரிட்டனில் அரச பதவி என்பது ஒரு அலங்காரப் பதவியாகவே கரணப்படுகின்றது.

அந்தக் காலத்து அரசர்களுக்கு இருந்த அதிகாரங்கள் எல்லாம் அமைச்சரவைக்குப் போய்விட்டன. அமைச்சர்களும் பாராளுமன்றமும் நிறைவேற்றுகின்ற சட்டங்களுக்கு கையெழுத்திடுவதே இவர்களின் பிரதான கடமையாக இருக்கின்றது.

பிரிட்டிஷ் அரச பதவியின் மாதிரியில்தான் சில நாடுகளில் அதிகாரம் இல்லாத ஜனாதிபதிப் பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. முனனா இலங்கையில் கவர்னர் ஜெனரல பதவி அவ்வாறுதான் அமைந்திருந்தது. பிற்காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட பதவியாக அதனை மாற்றிகொண்டு ஆட்சி நடத்தினார்.

பாகிஸ்தானிலும் முன்னர் அவ்வாறான முறைதான் அமுலில் இருநதது. ஆனால், அங்கு இராணுவத் தலைவர்கள் இராணுவப் புரட்சிமூலம் அதிகாரத்தில் அமர்ந்து கொண்டார்கள்

✵ ✵

## இலங்கை விஜயம்

ஐம்பதுகளில் மகாராணியார் இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது கண்டியில் பெரும் வரவேற்பு ஒன்று நடைபெற்றது. கண்டியில் இருந்த பழைய அரச பரம்பரை பிரதானிகள் அந்த வைபவத்தில் தங்களின் பாரம்பரிய உடைகள் தலைக்கவசங்களுடன் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

பிரதானிகள் ஏன் மிக நீளமான படுதாக்களை இடுப்பில் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று மகாராணி அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையிடம் கேட்டு வைததார். படாடோபங்களில் மிகுந்த பற்றுடையவரான சேர் ஜோனுக்கு பதில் தெரியவில்லை. அருகில் இருந்த அவரது செயலாளர் ஏதோ சொல்லி நிலைமையைச் சமாளித்தார்.

மலைநாட்டில் பயணம் மேற்கொண்டிருந்தபோது மகாராணியார் திடீரென தோட்டப்பகுதி மக்கள் இருப்பிடம் ஒன்றில் நுழைந்து ஒரு பெண் சோறு சமைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து குசலம் விசாரித்ததாகவும் செய்திகள் உண்டு.

சில வருடங்களுக்கு முன் மகாராணியாரின் மூத்த மகள் இளவரசி ஆன் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்தார். அரசியல் தலைவர்களை இளவரசியாருக்கு அப்போதைய வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் அறிமுகம் செய்து வைத்துக் கொண்டுவந்தார். அனுரா பண்டாரநாயககவின் முறைவந்தபோது ''இவர்தான் திருமதி பண்டாரநாயக்காவின் ஒரே மகள்'' என்று வாய்தவறிக் கூறிவிட்டார்.

உடனே இளவரசி ''இல்லை இவர் மகன்போலத் தெரிகிறதே'' என்றார்.

கதிர்காமர் சுதாரித்துக்கொண்டு ''ஆம், ஒரே மகன்தான்'' என்று கூறி சமாளித்தார்.

✵ ✵

## பிரிட்டனுக்கு புட்டின் விஜயம்

புட்டின் என்பது ரஷ்ய அரசியலில் பிரசித்தியான பெயர். இன்றைய ரஷ்ய அதிபரின் பெயர் விளாடிமிர் புட்டின். அண்மையில் இவர் பிரிட்டனுக்குச் சென்றபோது செங்கம்பள வரவேற்பு அளித்துக் கௌரவிக்கப்பட்டார். 129 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரிட்டனுக்கு விஜயம் செய்த முதல் ரஷ்ய அரசுத் தலைவர் என்பதனால் மட்டும் அல்லாமல் சோவியத் யூனியன் சிதறுண்டதன் பின விஜயம் செய்த முதல் தலைவர் என்ற முறையிலும் பிரிட்டன் அவருக்கு மதிப்பளித்துள்ளது.

# ரஷ்யாவின் புட்டின்

ரஷ்யாவில் மன்னர் ஆட்சிக் காலத்தில் புட்டின் என்ற பெயர் பிரசித்தி பெற்றிருந்தது. அதற்குக் காரணம் மதகுரு என்று தன்னைக் கூறிக் கொண்ட ஒரு மந்திரவாதி ஆவார். அவர் பெயர் ரஷ் புட்டின்.

இந்த ரஷ்புட்டின் மெஸ்மரிஸ கலையில், அதாவது பிறரை தன்வசமாக்கும் கலையில் அபார சக்தி பெற்றிருந்தார். மன்னரை மட்டுமின்றி அரசியையும்கூட தன் மெஸ்மரிஸ சக்தியால் கவர்ந்து அரசாங்க நிர்வாகத்திலேயே பல மாற்றங்களைச் செய்வித்தார்.

இந்த 'மதகுருவின் கதையை வைத்து தயாரிக்கப்பட்ட ஆங்கிலப் படம ஒன்று ''The Mad Monk'' என்ற பெயரில் வந்திருந்தது.

இப்படத்தில் ரஷ் புட்டினின் அபார சக்திகள் வெளிக்காட்டப்படுகின்றன. இரவு விடுதி ஒன்றில் பியர் போத்தல்களைக் குடித்து காலி பண்ணிய படி வெகுநேரம் ஆடிக்கொண்டிருக்க வேண்டும் என்றொரு போட்டி நடக்கிறது. பலர் ஆடுகிறார்கள் ரஷ் புட்டீனும் கலந்து கொள்கிறார். பியர் போத்தல்கள் ஒன்றன்பின் ஒன்றாக காலியாகின்றன. போட்டியில் வெகு நேரம் நின்றுபிடித்து ஆடிய மற்றொரு வரும்கூட போதை அதிகரித்து தள்ளாடி விழுந்து விடுகிறார். ரஷ் புட்டீன் இரவு முழுவதும் போட்டி முடியும்வரை சற்றும் தளராமல் பியரைக் குடித்தபடி ஆடிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்து அதிசயித்துப்போன மகாராணியின் தங்கை ரஷ்புட்டீன் மீது மையல் கொள்கிறாள். தான் நினைத்தபோதெலலாம் கூட ரஷ் புட்டீன் அவளை தனது மாயசக்தியால் தூரத்தில் இருந்தே இருப்பிடத்திற்கு அழைத்து விடுகிறார்.

ரஷ் புட்டீனின் அட்டகாசம் அதிகரிதது, அரசாங்கமே ஆட்டம் காண்கின்றது. அவனைத் தொலைத்துக் கட்டினால்தான் நாடு உருப்படும் என்ற நிலையில் சில நண்பர்கள் கூடி ஆலோசிக்கிறார்கள். ரஷ் புட்டீனின் நெருங்கிய நண்பரான டாக்டர் ஒருவர் இந்த சதியில் ஒத்துழைக்க முன்வருகிறார். ரஷ் புட்டீன் தன்னை சந்திக்கவரும்போது அவன் விரும்பி சாப்பிடும் தின்பண்டத்தில் விஷத்தை மருந்தேற்றும் ஊசிமூலம் செலுத்தி வைப்பதென்றும், அதைச்சாப்பிட்டபின் அவன் மரணமாவான் என்றும் அவர்கள் திட்டமிட்டு செயற்படுகின்றனர். எதிர்பார்த்தபடி ரஷ் புட்டின் வருகிறார். டாக்டர் நண்பருடன் கதைத்தபடி நஞ்சேற்றப்பட்ட தின்பண்டத்தை ஒன்றன்பின் ஒன்றாக சுவைத்துச் சாப்பிடுகிறான் தட்டிலிருந்த தின்பண்டம் முடியும் தறுவாயில்தான் தனக்கு தன் நண்பனாலேயே மோசம் நடந்துவிட்டதை உணர்கிறான். தள்ளாடி தள்ளாடி தன் எதிரிகளைத் தாக்க முனைகிறான். நஞ்சேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஊசியைக் கண்டெடுத்து அதனை டாக்டரின் மீது குறிவைத்து வீசித்தாக்குகிறான். ஊசிபட்ட மாத்திரத்தில் அவர் விழுந்து சாகிறார். ரஷ் புட்டின் மார்பையும் வயிற்றையும் பிடித்துக்கொண்டு பெரும் அவஸ்தைக்குள்ளாகி மாடியிலிருந்து விழுந்து மடிகிறான்.

✵ ✵

# வெள்ளமும் நீச்சலும்

## நீச்சல் தெரிந்திருந்தால்

இரத்தினபுரியில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ள அனர்த்தங்களின் போது நீச்சல் தெரியாத காரணத்தால் பலர் உயிர் துறந்ததாக கூறப்படுகின்றது.

இரத்தினபுரியில் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும், நகரின் பெரும்பகுதி நீருக்குள் அமிழ்ந்து போவதும் இன்று நேற்றல்ல, நெடுங்காலமாகவே இருந்து வரும் ஒரு பிரச்சினை. இரத்தினபுரி நகாின் அருகிலேயே களுகங்கையும் வேகங்கையும் ஒன்றாக இணைகின்றன. இதனால் மழைக்காலத்தில் தாழ்ந்த பகுதிகள் - குறிப்பாக அருகில் உள்ள பல கிராமங்கள் நீரில் மூழ்கிவிடுகின்றன. மேடான பகுதிகள் துண்டிக்கப்பட்டு விடுகின்றன. மக்கள் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகின்றார்கள். இந்த இரண்டு ஆறுகளும் ஒன்றாக இணையும் பகுதிக்கு அப்பால் நீரோட்டத்தைத் தடுத்துக்கொண்டு பெரும் பாறை ஒனறு இருப்பதாகவும், இப்பாறையை தகர்த்துவிட்டால் வெள்ளப்பெருக்கின் பாதிப்புக் குறையும் என்றும் அப்பகுதி மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறேன்.

இப்படியான ஒரு பாறை இருக்குமானால் அதைத் தகர்த்துவிட ஏன் அதிகாரிகள் அக்கறை கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

## நினைவுச் சின்னம்

இரத்தினபுரியில் பழைய ஆஸ்பத்திரி இருந்த பகுதியில் ஒரு நினைவுச்சின்னம் இருக்கிறது. அச்சின்னத்தைப்பற்றிய கதையொன்றுமுண்டு.

பல ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது வெள்ளைக்காரர் நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் இப்படித்தான் ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டதாம. குறிப்பிட்ட இடத்தில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு தவித்த ஏராளமான மக்களை அப்பகுதியில் பொறியியலாளராகவிருந்த ஒரு தமிழ் இளைஞர் தமது நீச்சல் திறமையைப் பயன்படுத்தி காப்பாற்றினாராம். கடைசியில் களைப்பினாலும், மூச்சுத் திணறியதாலும் அவர் அவ்விடத்திலேயே மூழ்கி மரணமானாராம். அவர் நினைவாகவே அந்தச் சின்னம் உருவாக்கப்பட்டதாக யாரோ கூறக்கேட்டிருக்கிறேன். அந்தச் சின்னம் இன்னமும் இருக்கிறதோ தெரியவில்லை.

நீச்சல் பயிற்சி பெற்றிருப்பது ஆபத்தான சமயத்தில் உதவியாக இருக்கும் என்பதால் இளைஞர்களும் யுவதிகளும் அதில் பயிற்சி பெற்றிருப்பது நல்லது. மேற்கு நாடுகளில் சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்றுவிக்கிறார்கள். பாடசாலைகள், கல்லூரிகளிலும் நீச்சல் ஒரு பயிற்சியாகவும், விளையாட்டாகவும் இருக்கிறது நீச்சல் பயிற்சி உடலுக்கும், உள்ளத்திற்கும் உரம் அளிக்கும் என்று கூறப்படுகிறது.

நீச்சல் தடாகங்களை பெரிய கல்லூரிகளில் அமைத்து மாணவர்களுக்கு பயிற்சியளிக்கலாம். தடாகங்களை முறையாகப் பேணிப்பாது காப்பதும் அவசியம்.

✵ ✵

# பொட்டர் நூலின் விற்பனை

## எழுத்தும் விற்பனையும்

நம்நாட்டு எழுத்தாளர் ஒருவரைப் பார்த்து ''ஐயா உங்களின் எந்த நூலபிரதிஅதிகமாக விற்பனையாயிற்று'' என்று கேட்டால் அவர் என்ன பதில் சொல்வார்? பதில் அவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்காது.

புத்தகம் போடவேண்டும் என்பதில் எல்லா எழுத்தாளர்களுக்கும் ஆசைதான். ஆனால், அதைச் சாதிப்பதற்கு முடிவதில்லை. எழுதுபவன் தன் எழுத்துக்களை நூல்வடிவில் பார்க்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறானோ, அதைவிட மகிழ்ச்சி அவனுடைய நூல் விற்பனையாகும் போது ஏற்படும்.

ஆனால, புத்தகம் எதிர்பார்க்கும் அளவுக்கு விற்பனையாகின்றதா? என்றால், - இல்லை.

அண்மையில் பிரிட்டனில் ஒரு பெண் எழுத்தாளர் வெளியிட்ட நூல் விற்பனையான விதத்தைப் பார்த்தால மூக்கின்மேல் விரலை வைக்கத்தோன்றுகின்றது.

இதல் விஷேசம் என்னவென்றால், அங்கெல்லாம் கதை. கட்டுரை என்பவை அரசியல் மற்றும் இலக்கிய தாரதம்யங்கள் பற்றி அக்கறைப் படாமல் எழுதப்படுகின்றன. நூல் வெளியாகி விற்பனையாகின்ற போது விமர்சகர்கள் அவைகளை விமர்சித்து தரம் பார்த்துக்கொண்டிருக்கட்டும் என்று விட்டு விடுகிறார்கள்.

இப்பொழுது விற்பனையாகியுள்ள ஹரிபொட்டர் தொடர் நவீனம் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட மாயா ஜாலக் கதையின் ஐந்தாவது தொடர்.



ஹரிபொட்டர் நூலின் ஆசிரியர் ஜே.கே.ரொவ்லிவ் ஸ்கொட்லாந்தில் தனது இளம் வாசகர் ஒருவருக்கு தம்நூலில் கையெழுத்திட்டு வழங்கும் காட்சி.

## நிமிடத்துக்கு 500 பிரதிகள்

ஹரிபொட்டர் தொடர் நவீனத்தின் புதிய பிரதி பிரிட்டனில் விற்பனைக்கு விடப்பட்ட பொழுது முதல் ஒருமணி நேரத்தில் ஒரு நிமிடத்திற்கு 500 பிரதிகள் வீதம் விற்கப்பட்டதாக அறிவித்துள்ளார்கள்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி நளளிரவுக்கு ஒருநிமிடம் பிந்தி இந்நூலின் 5ஆவது தொடர் விற்பனைக்கு வெளியிடப்பட்டது.

லண்டனில் பிக்கடில்லி என்ற இடத்தில் 1000 புத்தகங்கள் விற்பனை தொடங்கப்பெற்ற இரண்டரை மணி நேரத்துக்குள் விற்பனையாகியுள்ளன. 97 விற்பனை நிலையங்களில் நள்ளிரவில் விற்பனை ஆரம்பிக்கப்பட்டதாம்.

இநநூலின் வெளியீட்டாளர்களான புளூம் ஸ்பரி மற்றும் நூலாசிரியர் ஜே.கே.ரொவ்லிவ் ஆகியோர் எதிர்பார்த்ததைவிட விற்பனை வேகமும், தேவையும் அதிகரித்து விட்டதாகக் கருதப்படுகின்றது.

சிங்கப்பூர், ஹொங்கொங், மலேசியா உட்பட உலகம் முழுவதும் புத்தக விற்பனையாளர்கள் நூல் வாங்குவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பெரும் சங்கடங்களை எதிர்நோக்கினார்களாம். லண்டனில் விற்பனை நள்ளிரவில் தொடங்கப் பெற்றதால், அந்த நேரத்துக்குப் பொருத்தமாக கீழைத்தேய நாடுகளில் விடியற் காலையில் விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாரிஸ, பிரஸல்ஸ், புக்காரெஸ்ட, றியோடிஜெனிரோ ஆகிய நகரங்களில் இந்நூல் இன்னமும் அவர்களின் மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படாதபோதும் ஆங்கிலப் பிரதிகள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

ஹரிபொட்டர் அன் த ஒடர் ஒ.்.ப் த .்.போனிக்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்நூலின் கையெழுத்திடப்பட்ட முதல் பிரதி நியூயோர்க் பொது நூலகத்திற்கு கவசவாகனம்மூலம் கொண்டுசென்று கையளிக்கப்பட்டது. நூலகத்தின் தலைவர் அந்நூலைப் பெற்றுக்கொள்வதற்கு வெள்ளை நிறக்கையுறை அணிந்து பெற்றுக் கொண்டார். அமெரிக்காவில் வெளியிடப்பட்ட இந்நூல் பிரிட்டனில் வெளியிடப்பட்ட நூலைவிட, 100 பக்கங்கள் அதிகமாக இருந்தது. அதிக பக்கங்களும் இடைவெளிகளும் இடம்பெறுவதற்காக இவ்வாறு செய்யப்பட்டதாம்.

நியூசிலாந்தில் 27 மணிநேரம் பொடடர் நூலைத் தொடர்ந்து உரத்து வாசித்து சாதனை நாட்டும் முயற்சியில ஈடுபட்டிருந்த சிறுவர்கள் கோஷ்டியொன்றுடன் நியூஸிலாந்துப் பிரதமர் ஹெவன்கிளார்க்கும் இணைந்து கொண்டார். ஆஸ்திரேலியாவில் சிட்னியில் இருந்து ஹொக்வார்ட் கடுகதி ரயிலில் ஏறி பொட்டர் புதிர் போட்டியொன்றுக்குப் போய்க்கொண்டிருந்த மாணவர்கள் தமக்கிடையில் பொட்டர் அறிவை சோதித்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டார்கள்.

பிரிட்டனிலும், விற்பனை நிலையங்கள் ''பொட்டர் இரவு'' நிகழ்வுகளை நடத்தின. இந்தியாவில் பம்பாய் போன்ற நகரங்களில் பொட்டருக்காக வாசகர்கள் காத்திருந்து பெற்றுக் கொணடார்கள்.

நம்நாட்டுச் சிறுவர்கள் இதுபற்றி அறிந்தே இருக்க மாட்டார்கள். அவர்களுக்குத்தான் ஆங்கில நூல்களை வாசக்கும் ஆர்வமும் இல்லை. அந்த அளவுக்கு ஆங்கில அறிவும் போதாது 1956 ஆம் ஆண்டுக்குப் பின் பதவிக்கு வந்த மத்திய அரசுக்கே இந்தப் புண்ணியம் போய்ச்சேரவேண்டும்.

**அன்பன்**

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கொள்கை உடன்பாடு முற்றாகிவிட்டதாம்

## மைத்திரிபால சேனநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான பேச்சுக்கள் தோல்வியில் முடிவதாக சில பத்தி ரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை என்று கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 40 வருடங்களாக சுதந்திரக் கட்சி இடதுசாரிக் கட்சிகளுடன் தொடர்புகளை கொண்டுள்ளது. காலத்துக்குக்காலம் கூட்டணிகளையும் அமைத்து வந்துள்ளது. இவ்வாறு இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டு முன னணிகளை அமைக்கும் போதெல்லாம் அவற்றை உடைப்பதில் ஐ.தே.க. பல சதிகளை செய்துவந் துள்ளது. இப்பொழுது ஜே.வி.பி. யுடன் கூட்டு முன்னணியை அமைக்க முயற்சிக்கும் வேளையில் அரச ஊடகங்களினூடாக பிரசாரம் செய்து கூட்டணியை உடைக்க முயல்கிறது.

சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி. யும் கடந்த 6 மாதங்களாக பேச்சுக் களை நடத்தி வந்துள்ளன. கடந்த புதன் கிழமை கூட்டு முன்னணியின் கொள்கை விடயத்தில் இறுதி உடன் பாடு காணப்பட்டுவிட்டது. இதே வேளை, பொ.ஐ.மு.யின் ஏனைய கட்சிகளுடன் ஜனாதிபதி குமார துங்க உரையாடி அவர்களுக்கு புதிய முன்னணி பற்றிய தெளிவு களை ஏற்படுத்தி வருகிறார். இதனைத் தொடர்ந்து மீண்டும் அவர் ஜே.வி.பி.யுடன் பேசவுள்ளார். இவ்வாறு மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டதும், எதிர் வரும் வாரத்தில் சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் கூட்டாக செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளதாகவும், ஐ.தே.மு.யின் சில எம்.பி.க்களின ஒத்துழைப்புடன் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் யோசனைகள் தீவிரமடைந்துள்ள தாகவும் முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(பி)

### ஐ.தே.அரசு

## சமாதான, அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்காது

### அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களும், பொருளாதார வளர்ச்சியும் எற்படும். இதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒருபோதும் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயறசிகள் வெற்றியளித்து வருவதைக் கருத்தில் கொண்டே சர்வதேச நாடுகள் இலங்கைக்கு கோடிக்கணக்கான நிதியுதவிகளை வழங்க முன் வந்துள்ளன.

இந்நிதியுதவியின் கீழ் நாட்டின் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்களும், சமாதான நடவடிக் கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## எம்பிலிப்பிட்டிய செல்வதில் பிரதமருக்கு ஏற்பட்ட சிரமம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றிச்சென்ற ஹெலிகொப்டர் இறங்குவதற்கு காலநிலை வாய்ப்பானதாக இல்லாததால் மூன்றரை மணித் தியாலங்கள் பறந்தபடி இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமையன்று அனுராதபுரத்தில் நடைபெற்ற இரண்டு மரணச் சடங்குகளில் பங்குபற்றி விட்டு, எம்பிலிப்பிட்டியவில் உள்ள மகாவலி விளையாட்டு மைதானத்தை அடைவதற்கு சென்றிருந்தாராயினும், இறங்கமுடியாத நிலையில் மீண்டும் திரும்பி இரத்மலானை விமான நிலையத்திற்கே வந்தனர். மீண்டும் எரி பொருள் நிரப்பிய பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் எம்பிலிப்பிட்டிய சென்றதாக அறியப்படுகிறது.

இதேவேளை, கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழுவின் கூட்டம் கட்சியன் பிரதித் தலைவர் கருஜயசூரிய தலைமையில் ஆரம்பித்திருந்தது.(பி)

### கண்ணிவெடிகளை

## கண்டுபிடிக்க எலிகள் பன்றிகளை பயன்படுத்தலாம்

(கொழும்பு)

கண்ணிவெடிகள் எங்கெங்கே விதைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டுபிடிப்பதில் - எலிகளையும், பன்றி களையும் பயன்படுத்த முடியும் என்று மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரிஷாந்த நாணயக்கார தெரிவித் தார். மூன்றாம் உலக நாடுகளில் பாதுகாப்பான முறையிலும், மிகவும் குறைந்த செலவுடனும் இதனை நிறைவேற்ற முடியும் என்றும் எலிகள், பன்றிகளின் மோப்ப சக்தியை இதற்காக பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் ஐ.நா.அபிவிருத்தி திட்ட அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறினார். அண்மையில் அமெரிக்க ஹொக்கின்ஸ் பல்கலைக் கழகத்தில இருந்து திரும்பிய இவர், யாழ்ப் பாணததிற்கும் சென்று திரும்பி யிருந்தார். (பி)

## வாழைக்குலைகள், பழவகைகள் சாக்குகளில் அனுப்பத்தடை

### விரைவில் சட்டம் உருவாக்கப்படும் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

வாழைக்குலைகள் உட்பட சகல பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகள என்பவற்றைச் சாக்குப் பைகளில் அடைத்து லொறிகளில் எடுத்துச் செல்வதற்கு கடுமையான சட்டதிட்டங்களுடன் தடை விதிக்கப்போவதாக விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்தடைச்சட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அமுல்படுத்தபடும் எனத் தெரிவித்த அமைச்சர், இவ்வாறு சாக்குப்பைகளில் பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகளை ஏற்றிச் செல்வதால் அவை விரைவில் பழுதடைந்து விடுகின்றது. அத்துடன் ஈக்களும் அதிகம் மொய்த்துக் கொள் கின்றது எனச் சுட்டிக்காட்டினார்.(க-10)

# புலிகளின் யுத்தநிறுத்த மீறல்களுக்கு ஐ.தே.முன்னணி அரசு அங்கீகாரம்

## தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையினை முழுமையாக கடைப்பிடிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அழுத்தத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசு அல்லது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே கொடுக்கவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை, தமிழீழ விடுதலைப் புலிகள் பலதடவை மீறியுள்ளனர். இதனை அரசாங்கம் கண்டும் காணாதது போல மௌனம் சாதித்து வருகிறது.

இதனடிப்படையில் புலிகளின் இவ் அத்துமீறல்களை அரசாங்கம் அங்கீகரிக்கிறது போல் தெரிகிறது.

இவ்வாறு புலிகளின் அத்துமீறல்களை அரசாங்கம் அங்கீகரித்தால் நிலையான சமாதானம் ஏற்பட வழியேற்படாது.

உலக நாடுகளுக்கு சமாதானம் எனக்கூறிக் கொண்டு, புலிகள் யுத்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பமானால் இராணுவத்தினர் தரப்பில் பாரிய இழப்புகள் ஏற்பட சாத்தியம் உண்டு. இதனை அரசாங்கம் நன்குணர்ந்து அதனடிப் படையில் அரசை வழிநடத்தவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.(தி)

### விசேட சொற்பொழிவு

நயினை நாகபூசணி அம்மன் ஆலய 10ஆம் நாள் திருமஞ்சனத் திருவிழாவில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி கலாநிதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயா விசேட சொற்பொழிவாற்றுவார்.

நாளை செவ்வாய்க்கிழமை 10ஆம் நாள் உற்சவம் இடம் பெறவுள் ளது. (க-15)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று ஒன்பதாம் திருவிழா



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### எழில் நயினை உறைபவளே

தங்க நிறச் சுந்தரியே தாயே
தமிழ் விஞ்சும் அம்பிகையே
அங்கமெலாம் அரவணைந்த தாயே
ஆதியது பாதியென நிற்பவளே
குங்குமப் பொட்டோடு தாயே!
குமிண்சிரிப்போடு இருப்பவளே
எங்கள் குலம் காப்பவளே - தாயே
எழில் நயினை உறைபவளே

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

### சோகமழித்திடுவாய் சுந்தரியே!

"நாகபடமீ தமர்ந்தருள் புரி யம்பிகையே
சோகமனைத்து மழித்திடுவாய் - சுந்தரியே
பாகமதில் பசுபதியாய் காட்சியளிப்பாய் - எம்
தேக மழிந்திடும் வேளை - கூடும்
நயினைப் பதியி னின்று கூட்டிடுவாய்
நாமுமே வந்துனை நாடி - சூடும்
பாட்டர்ச்சனை யாக வைத்திட்டோமம்மா"

வேலணை பாலா

### பாவவினை தீர்த்தருள்வாய்

நயினைதேவி ஆனவளே நாகம்மா
அம்மா நாகம்மா
நாடி உனை வந்தோம் அம்மா நாகம்மா
அம்மா நாகம்மா
பட்டதுயர் போதும் அம்மா நாகம்மா
அம்மா நாகம்மா
பறந்தோடி வந்தருள்வாய் நாகம்மா
அம்மா நாகம்மா
செம்பாம்போ கரும்பாம்போ நாகம்மா
அம்மா நாகம்மா
செவ்விளநீர் தீர்த்தம் அம்மா நாகம்மா
அம்மா நாகம்மா
பக்தர் உனை வேண்டுகின்றோம் நாகம்மா
அம்மா நாகம்மா
பாவவினை தீர்த்தருள்வாய் நாகம்மா
அம்மா நாகம்மா

கே.கமலேஸ்வரன்

### ஓடி வருவாயா!

நன்மைகள் நயந்திட அருள்புரிவாய்
நாடு நலம்பெற நற்கதி தந்திடுவாய்
நாகபூ சணியே! நாடி வருகின்றோம்
நல் அருள் அருளுவாய் நல் அம்பாளே!

நீடூழி வாழ வழிசமைக்கும் பெரும் தாயே
பாடல் பாடுகின்றோம் பக்தி நிறைவுடன்
தேடுகின்றோம் உன்னை நேரில் காண
ஓடி வருவாயா உள்ளம் உவந்திட - என்தாயே!

வ.காந்திமதிநாதன் கொற்றாவத்தை

### ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(யாழ்.பல்கலை. தமிழ்த்துறைத் தலைவர்)
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

# ஈழத்தமிழ் தேசிய உணர்வினை கவிதைகளில் முன்னெடுத்த முன்னோடிக் கவிஞர் தில்லைச்சிவன்

கலாநிதி
செ. திருநாவுக்கரசு

ஈழ நாடறிந்த நல்ல தமிழ்க் கவிஞர், தில்லைச்சிவன். வேலணை, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர் தி.சிவசாமி என்பது அவரது இயற்பெயர். 1928ல் பிறந்த கவிஞர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இன்று தமது 75வது வயதிலும் சுறுசுறுப்புடன் தமிழிலக்கியப் பணி செய்து வருபவர் அந்தக்கால தமிழரசுக்கட்சியின் மேடைகளை அலங்கரித்த இளம் பேச்சாளார் தமிழ்த்தேசிய உணர்வுகள் பெருக்கெடுத்த நெஞ்சம் கொண்டிருந்த போதிலும், முற்போக்கான இடதுசாரிக் கருத்துக்களிலும் பற்றுக்கொண்டவர். ஆதலாற்தான் ஈழத் தமிழ் இலக்கிய எழுத்தாளர் பலரும் அவரது அன்புக்கும் நட்புக்கும் உரியவர்களானார்கள்.

ஏற்கனவே மாணவப் பருவத்தில் உள்ளத்தில் ஊற்றெடுத்த இலக்கியத்தாகம், அவரது 19வது வயதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் வெளிப்பட்டது. வை.இராவணன் என்பவர் ஆசிரியராய்ப் பணிபுரிந்த 'புயல்' என்னும் ஏட்டிலும், கோ.நடேசையரின் 'வீரன்' ஏட்டிலும் தில்லைச்சிவனின் ஆரம்ப காலக் கவிதைகள் வெளிவந்து ஊக்கமளித்தன 1947ல் 'புயல்' பத்திரிகை வெளியிட்ட 'படை திரண்டு வருவதனை பாரீர் சொன்னேன்' என்ற தலைப்பிலான கவிதையே ஈழத் தமிழ் கவிதைகளில் தமிழ்த்தேசிய உணர்வை நேரடியாக முதன் முதலாக வெளிப்படுத்திய தெனலாம். இதனைக் கவிஞர் இ.முருகையன் அவர்களும் 'வெளிச்சம்' முத்தமிழ் விழாமலரின் கட்டுரையொன்றில் உறுதி செய்திருக்கிறார்.

'எந்திரம்போல் உழைப்பவனோ
- பசியால்வாடி
ஏங்கியழும் குழந்தைமுகம் கண்டு
- நைந்து
சிந்தித்துச் சுரண்டும் முதலாளிமீது
சினம்கொண்டு சிரமறுக்கத் துணி
- வானன்றி
வந்தித்து அடிதொட்டு வயிறுகாட்டி
வாழவழி பார்த்திடான் மானம்காத்த
செந்தமிழான் செருவென்றால்
- வாளைத்தொட்டு
சீறியெழும் சிங்கமடா சிந்தித்தாயா'

முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு எதிராகப்போரிடும் செயலைச் செய்வானேயல்லாமல் அடிமையாகி அடங்கிப்போகான் செந்தமிழன். ஏனென்றால் போர் அவனுக்குப் புதிதல்லவே! வீரம் விளைந்த பரம்பரையில் வந்தவன் தமிழன். இவ்வாறு தமிழ்த்தேசிய உணர்வுப் பெருமை இக்கவிதையில் உணர்த்தப்பட்டுள்ளது. தமிழ்மொழினதும், தமிழ் மக்களினதும், தமிழ் மண்ணினதும் சிறப்புக்கள் பலவிதமான பல கவிதைகளால் இதற்குமுன்னர் சித்திரிக்கப்பட்டிருப்பினும், தில்லைச்சிவனின் கவிதை அந்த உணர்வின் பரிணாம வளர்ச்சியாகித் தீவிரத்தன்மையை நல்கியுள்ளது.

'சுதந்திரன்' பத்திரிகையில் 5.8.1949ம் முதல் 30.10.1949வரை வெளிவந்த 'தமிழர் திரு உயரச் செய்வீர்!' எனுங் கவிதையில்,

'தமிழர்நாடு தமிழருக்கெனும்
முரசம் எங்கும் கேட்கவே
தமிழர்வாழ்வில் உரிமைகோரி
தமிழர்நாங்கள் கூடுவோம' என்று கூறும் கவிஞர் தில்லைச்சிவன், 'புரட்சி' (சுதந்திரன் 12.2.1950) என்ற கவிதையில்

'மானமதே உயிரென்று மதித்து
உரிமைப் போரில்
மடிந்திடவும் தயாரென்னும் மனத்
திடத்தினோடு
வானகமும் வையகமும் வாழ்ந்
தெடுக்க அன்பு
வழியினிலே அகிம்சைப்போர்
தொடுத்துவிட்டார் அடடா!'

என்கிறாா. மேலும் 'தமிழ் தொடுத்த போர்' (சுதந்திரன்17.6.1956) என்னும் கவிதையிலும் தமிழுணர்வையே பிரதிபலித்துள்ளார். தமிழர்களில் விடுதலைப்போராட்ட உணர்வுகள் காலத்துக்குக் காலம் கவிஞரின் கவிதைகளுக்குக் கருப்பொருள்களாயின. அவற்றோடு சமூக அக்கறையும் அதனாலுருவான 'பாடு பொருள்களும் கூடத் தில்லைச்சிவன் கவிதைகளில் ஊடுவிக் காணப்பட்டன. 1960களில் 'தமிழன்' 'கலைச் செல்வி' ஆகிய இலக்கிய ஏடுகளை இரண்டாண்டுகள் வரையில் வெளியிட்டுத் தமது இலக்கிய வேட்கையைத் தணித்துக்கொண்டவர் தில்லைச்சிவன். ஈழத்தின் புகழ்பெற்ற 'மறுமலர்ச்சி' சஞ்சிகையில் தில்லைச் சிவனின் 'பழக்கம்' என்ற ஓரங்க நாடகம் வெளிவந்தபின் அவரது 'பட்டனத்து மச்சினி' கவிதை வெளிவந்து பலரது பாராட்டினையும பெற்றுக்கொண்டது. நகைச் சுவை உணர்வினையும் நாகரிக வெறுப்பினையும் எடுத்துக்காட்டும் கவிதை இதுவாகும் .

'பொழுதுபட்டுப் பன்னிரண்டு
மணியளவில் வருகிறா
பொழுதுபோக்குக் கேற்றபடம்
என்றுசொல்லிப் புளுகிறா
பட்டனத்து மச்சினியைப்
பார்க்கப் பயமாகுது
கட்டிக்கொண்டால் வேறுசனியன்
வேண்டாமென்று தோணுது'

சுதந்திரன், தினகரன், வீரகேசாி, ஆனந்தன், அணிகலன், வசந்தம், ஈழகேசரி, பாப்பாமலர், உதயம, திராவிடன், ஈழநாடு, மல்லிகை முதலான ஈழத்தமிழ் பத்திரிகைகள்-சஞ்சிகைகளில் தொடங்கி, இன்றைய வெகுசன வெளியீடுகளிலெல்லாம வீசுடன் எழுதி வருபவர் தில்லைச்சிவன. கனவுக்கன்னி (1961), தாய்(1969), தில்லைச்சிவன் கவிதைகள்(1998), தாழம்பு(1996),நாவலர் வெண்பா (1997) ஆகிய கவிதைத் தொகுதிகளும், பாப்பாப் பாட்டுக்கள் (1985),பூஞ்சிட்டு 1998) முதலான பிள்ளை இலக்கியங்களும், நான் (1993),ஆசிரியை ஆகினேன். (2000) ஆகிய குறுங்காவியங்களும், ஐயனார் அருள்வேட்டலும் திருவூஞ்சலும் 1972), வேலணைத் தீவுப் புலவர்கள் வரலாறு(1996), அந்தக்காலக் கதைகள்(1997), முதலானவைகளும் நூலுருவாக்கம் பெற்றுள்ள கவிஞர் தில்லைச்சிவனின் படைப்புக்களாகும். தமிழத்தேசிய உணர்வு, தமிழர் பண்பாட்டுணர்வு, தமிழ்ச்சமூக அக்கறை உணர்வுமானுட நேயம், ஆன்மீக அலசல்கள் என்றவாறு பல்துறைப் பாடுபொருள்களால உருவானவை தில்லைச்சிவனின் கவிதைகள். மாறாகச் சிறுகதைத்துறையிலும், ஆரம்பகாலங்களில் 'தினகரன்' முதலானவற்றில் எழுதியதற்குப் பிறகு, சமீபத்தை தமிழினத்திற்கு எதிரான பேரினவாதத்தின் வன்முறைகள் ஏற்படுத்திய வடுக்கள் தந்த உந்துதலில மற்றுமசில சிறுகதைகளைப் படைத்தளித்தார் தில்லைச் சிவன் ஏற்கனவே 'மல்லிகை'யில் அவர் எழுதிய 'அந்தக்கால கதைகள்' நூலாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தில்லைச்சிவனின் சிறுகதைத் தொகுதியான 'காவல் வேலி'யின் அறிமுகவிழா 05.07.2003 சனிக்கிழமை பி.ப.4.30மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாரமண்டபத்தில நடைபெறறது. ஈழத்துத் தமிழ்க்கவிதைத்துறையில் தடம் பதித்த மூத்த எழுத்தாளரின் இன்னுமொரு பரிமாணத்தினை இச்சிறுகதைத் தொகுதி நமக்கு உணர்த்தி நிற்குமெனலாம். □

## இடமாற்றம்

(கொழும்பு)

மீன்பிடித்துறை நீரியல்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சீ. மானப்பெருமா, பொது நிர்வாக அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மீன்பிடித்துறை அமைச்சரான மகிந்த விஜய சேகராவை அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் பலர் முன்னிலையில் இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்த முயற்சித்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் அண்மையில் புகார் செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-10)

## 'எண்ணம் வெளியீடு'

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு திக்கம் மத்திய சனசமூக நிலையம் 'எண்ணங்கள்' எனும் கையெழுத்துப் பிரதியை வெளியிட்டுள்ளது. (உ-8)

## பாதுகாப்புஊழியர் பீல்ட்பைக் மோதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில்பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றும் ஊழியர் இராணுவ பீல்டபைக் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையின் அவசரசிகிச் சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் நீர்வேலியைச்சேர்ந்த சி.சிவநேசன்(வயது 24)என்ற பாதுகாப்பு உத்தியோகத்தாரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப ஊழியர் தனது கடமையை முடித்துக்கொண்டு வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, மேயடிச்சந்தியில் வைத்து இராணுவ பீல்ட்பைக் மோதிவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# தமிழர் ஐக்கியப்படாது போனால் எஞ்சிய உரிமைகளும் பறிபோகும்

## புதிய ஜனநாயகக்கட்சிப் பிரமுகர்

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் அனைவரும் ஐக்கியப்படாவிட்டால் ஏற்கனவே பறிக்கப்படடு எஞ்சியுள்ள உரிமைகளையும் இழக்க நேரிடும்என புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் சட்டத்தரணியுமான இ.தம்பையா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ். பலநோககுக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில நடைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டுவிழாவில் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தற்போதுள்ள அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில் தமிழர்களின் உரிமைகளவென்று எடுக்கப்பட வேண்டுமமானால் தமிழ்மக்கள் அனைவரும் ஐக்கியப்பட வேண்டும்.

தேசியவாத கட்சிகளுக்கும் எமக்கும் இடையில் முரண்பாடுகள் பல இருந்தாலும் அதை தற்போதைய நிலையில் தள்ளிவைத்துவிட்டு சமாதான முயற்சிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட முன்வரவேண்டும்.

ஏனெனில் தற்போதுள்ள யுத்த நிறுத்தத்தையும் அமைதிவாழ்வையும் சாதகமாக பயன்படுத்தி எம் இனத்தின் எதிரிகள் எம்முள் ஊடுருவிக் கொண்டு இருப்பதால் நாம் அனைவரும் இவ்விடயத்தில் விழிப்பாகஇருந்தல் அவசியம்.

எம்இனத்தின் அமைதியை குலைக்க சதிவலை விரித்துநிற்கும் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியசக்திகள் இதனை சாதகமாக பயனபடுத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

எனவே எமது முரண்பாடுகளை சற்று ஒதுக்கி வைத்துவிட்டு எம்மை தொடர்ந்தும் அடிமை வாழ்வுக்குள் தள்ளநினைக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இனவாதிகளுக்கும் எதிராகக் குரல்கொடுக்கவேண்டும்.

அடிமைவாழ்வு தொடரும்போது சமாதானத்தை உருவாக்க முடியாது .

எம் சுதந்திரம் சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்கு குரல் கொடுத்து நற்போம் இவ்வுரிமை களை வென்று எடுப்பதற்காக நடை பெற்றுவரும் தேசிய விடுதலைப் போராட்டம் நியாயமானது. எனவே நியாயமான போராட்டத்தை பலப்படுத்த ஒத்துழைப்பு அவசியம்.

இந்தியாவுடன் இணைந்து அதன் ஆலோசனைப்படி அரசியலை நடத்த முயற்சிக்கும் தலைவர்களின் பாதையில் தமிழர்கள் இல்லைஎன்பதை அனைவரும் உணரவேண்டும். ஏனெனில் கடந்தகால அரசியல் வரலாற்றில் இந்தியரசு தமிழர்க்கு செய்த கொடுமைகளை நாம் இன்னும் மறக்கவில்லை.

எனவே புலிகளின் இலட்சியத்துக்கு எதிராக தமிழ்கட்சிகளை திருப்பும் இந்தியாவின் சதித்திட்டத்தை முறியடிக்கும் விடயத்தில் நாம் அனைவரும் விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்றார். (க-04)

# கலாசாரப் பொருட்களை ஆவணப் படுத்துவதில் சிக்கல்

(கொழும்பு)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புராதன சின்னங்களையும், கலை,கலாசாரப் பொருள்களையும் ஆவணப்படுத்துவதில் சில சிக்கல்கள் தோன்றியுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

றுகுணு கல்விக்கலாசார கண்காட்சியை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலேயே இச்சிக்கல்கள் தோன்றியுள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்றுவந்த போதிலும் அங்கு கலை, கலாசாரங்கள் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன.

ஏனைய பிரதேசங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டும் கொள்ளையடிக்கப்பட்டும் வருகின்றன. இதனால் நாட்டின் முக்கிய பொக்கிசங்கள் இல்லாதொழியும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இதனால் அந்தந்தப் பிரதேச மக்களே அவற்றை பேணிப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் அங்கு கேட்டுக்கொண்டார்.(தி)

# உலக வல்லரசுகளே கண்டுஅஞ்சும் கரும் புலிகளின் படையணி

## சிவாஜிலிங்கம் எம்.பி.கரும்புலிகள் தினநிகழ்வில் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் தலைமையிலான கரும்புலிகள் படையணியினை உலக வல்லரசு நாடுகளேகண்டு அஞ்சுகின்ற அளவிற்கு கரும்புலிகளின் பலம் உலகின் கண்களைத் தொட்டுள்ளது.

நேற்று முன்தினம் வடமராட்சிக்கிழக்குப் பகுதியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தினநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்குதொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்கி விடவேண்டுமென்று சில வல்லரசுநாடுகள் திட்டம்தீட்டி வருகின்றன.

ஆனாலும் தமிழீழ விடு தலைப்புலிகள் சோர்ந்துவிடாது மக்களுக்கு எப்பாடுபட்டாவது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் அவர்கள் அமைதியாக வாழவேண்டுமென்ற நோக்கங்களை கருத்தில் கொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எமது போராட்ட சக்தியாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணியைக் கட்டிக் காக்கின்ற பொறுப்பு அனைத்து தமிழ் மக்களிற்கும் உண்டு என்றார்.

இதேவேளை, இந்நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் உரையாற்றுகையில்,

மக்களிடையே ஓர் விழிப்புணர்வை தந்தை செல்வா ஏற்படுத்தியிருந்தாலும்கூட எமது இழந்த உரிமைகளை மீட்கமுடியாத சூழ்நிலையில் 16வயதில் எமது தேசியத்தலைவர் வே.பிரபாகரன் ஆயுதம் ஏந்தி ஆயுதப்போராட்டத்தை தோற்றுவித்தார்.

இதேபோன்று பயங்கரவாதம் ஆயுதக்கலாசாரம் எனப்பலர் கூக்குரலிட்டபோதும் விடுதலைஎன்றால் என்ன என்பதை உலகிற்கு காட்டி போராட்டத்தின் வெற்றிகளை கரும்புலிகள் அள்ளித் தந்தார்கள்.

240 கரும்புலிகள் விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்திருக்கிறார்கள். இவர்களில் 130பேர் கடற் கரும்புலிகளாவார்கள்.

இவர்களின் தாக்குதல்கள் எமது விடுதலைப்போராட்டத்தின் பல திருப்புமுனைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

வடுதலைப்போராட்டத்தை நடாத்திக்கொண்டிருக்கும் எமது தலைவர் வே.பிரபாகரன் மாவீரர்களை மட்டுமன்றி அவர்களது பெற்றோர்களையும் போற்றிவருதலும் பாராட்டிற்குரியது என்றார்.(க-43)

# அடகுக் கடன் வட்டி வீதத்தை குறைக்க கோரிக்கை

(கொழும்பு)

அரச வங்கிகளில் தங்கநகை அடகுக்கடன்களின் வட்டிவீதத்தை குறைப்புச் செய்யுமாறு வாடிக்கையாளர்களினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வங்கிகளின் சாதாரண கடன்களுக்காக 9.5 சதவீதத்தில் இருந்து 12சதவீதமான வட்டிவீதங்கள் அறவிடப்படுகின்றன.

ஆனால், தங்கநகைகளின் அடகுக்கடன்களிற்காக 18வீதவட்டி அறவிடப்படுகிறது என வாடிக்கையாளாகளினால் சுட்டிககாட்டப்பட்டுள்ளது.

அடகு நகைகள் கடன்களுக்காக மக்கள்வங்கி 25ஆயிரம் கோடி ரூபாவையும், இலங்கைவங்கி 13 ஆயிரம் கோடிரூபாவையும் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

ஐயவுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்புணர்வு இல்லாதவர்க்கு.
—குறள்

வலம்புரி

## அதிபரின் கார் எரிப்பு

யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் அதிபரின் பெறுமதி வாய்ந்த கார் விஷமிகள் சிலரால் எரிக்கப்பட்டிருப்பது கல்வியாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த விஷமிகள் காருக்குள் பெற்றோலை ஊற்றி எரித்து முற்றாக நாசப்படுத்தியுள்ளனர்.

பிரஸ்தாப பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டு செயற்படும் அதிபரை பழிவாங்கும் நோக்குடன் நடந்த கோழைத்தனமான இச் சம்பவம் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.ஒரு பாடசாலை அதிபரின் காரை எரித்து நாசமாக்கியவர்களை சரியான முறையில் இனம் கண்டு உரிய தண்டனை வழங்கப்படவில்லையாயின் அதன் விளைவு, பாடசாலை மாணவரிடையே பரவி மிகமோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது,மறுக்க முடியாத உண்மை.

இன்றையை சமூக சீரழிவும் கலாசாரப் பிறழ்வுகளும் குருவை மதிக்காத கீழ் நிலையும் எந்தளவு தூரம் யாழ்ப்பாண சமூகத்தில் வியாபித்துள்ளது என்பதை சென்சாள்ஸ் அதிபரின் கார் எரிக்கப்பட்ட சம்பவம் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது அந்தப் பாடசாலையின் அதிபரின் முகாமைத்திறத்திலேயே தங்கியுள்ளது.அவ்வகையில் சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் தற்போதைய அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை அவர்களின் முகாமைத்துவ திறத்தால் மிகப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.கல்விப் பெறுபேறுகள், விளையாட்டுத் துறைகள், வாணமை விருத்திப் போட்டிகள் என பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் பங்கேற்று பாடசாலையின் பெயரை நிலை நிறுத்தியுள்ளனர்.

பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அதிபரினால் கடைப்பிடிக்கப்படும் கண்டிப்புக்களையும்,ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் ஆசிரியரோ, மாணவரோ அன்றிப் பெற்றோரோ தவறாகப் புரிந்து கொள்வார்களாயினஅதன் விளைவு கல்விக்கூடங்களை படுகுழிக்குள் தள்ளிவிடும்.

தங்களின் சுயநலத்திற்காக பாடசாலையின் வளர்ச்சியைத் தடுக்கும் எவரையும் கல்விச் சமூகம் ஒருபோதும் மன்னித்து விடக்கூடாது.அவ்வகையில் பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஒரு அதிபரின் கார் இரவோடு இரவாக தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதெனின் அது விடயத்தில் நீதி பரிபாலனம் கூடிய கவனம் எடுப்பது மிகமிக அவசியமாகும்.

ஏற்கனவே தமக்கு விதிக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் குறித்து பிரஸ்தாப பாடசாலையின் அதிபர் பொலிஸில் முறையீடு செய்த போதிலும் இது விடயத்தில் பொலிஸார் அக் கறையோடு நடவடிக்கை எடுத்திருந்தால் கார் எரிக்கப்பட்ட சம்பவத்தைத் தடுத்திருக்க முடியும்.

எனவே பொலிஸார் கூடிய கவனம் எடுத்து குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நீதிமன்றில் நிறுத்துவது அவர்களின் தலையாய கடமையாகும்.

# தமிழர் பிரச்சினையை தீர்க்க விரும்பினால்
# இரு பிரதான கட்சிகளும் இணைந்து
# அரசியலமைப்பை மாற்றமுடியும்

(மட்டக்களப்பு)

இரு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க முடியுமென தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு, அம்பாறை மாவட்ட விசேட தளபதி றமேஸ் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பேசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர் ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரு பிரதான கட்சிகளும் இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற அக்கறையுடன் கூட்டாக செயற்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்த முடியும்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையே யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுக்களில் நாம் ஈடுபட்டோம்.

இந்நிலையில் பாராளுமன்ற அங்கீகாரமின்றி வடக்கு கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை அமைப்பை தற்போதைய அரசாங்கத்தினால் வழங்க முடியாதுள்ளது.

பாராளுமன்ற அதிகாரம் கொண்ட பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவும் தங்களுக்குள் முரண்பாடுகள் காரணமாக தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வில் முக்கிய கவனம் செலுத்துவதில்லை.

மாறாக உலக நாடுகளுக்கு தாம் சமாதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருவதாக காட்டிக் கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## 4 மாதங்களில் வருமானவரியாக ஆயிரத்து 500 கோடி ரூபா
### நிதியமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை உற்பத்தி மற்றும் கலால் வரிகளாக ஆயிரத்து 500 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது என நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் சிகரெட் வரி மூலம் 600 கோடி ரூபாவும் மதுபான வரிமூலம் பெறப்பட்ட 300 கோடி ரூபாவும் இதில் அடங்கும்.

எரிபொருள் மூலம் இயங்கும் வாகனங்கள் மற்றும் மென்பானங்கள் மூலம் பெறப்பட்ட வரி 500 கோடி ரூபாவாகும்.

வருடாந்த மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் உற்பத்தி மற்றும் கலால் வரிகளின் மூலம் பெறப்பட்ட வருமானம் 30 சதவீதமாகும்.

சிகரெட் உற்பத்தி மீது விதிக்கப்பட்ட வரி 2.5 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. பெறுமதி தீர்மான வரி அறிமுகப்படுத்தப்பட்டமையே இதற்குக் காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சிகரெட் உற்பத்தி வரியில் சுமார் 8 சதவீதம் விலை ஸ்திரத்தைப் பேணுவதற்கு பெறுமதி தீர்மான வரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் புள்ளி விபரங்களுடன் ஒப்பிடும் போது கலால் மூலமான வருமானத்தில் 11 சதவீத வீழ்ச்சி காணப்படுகிறது. வருமான வரிகளை சேகரிக்கும் முறையில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு காரணம்.

மதுபான வரி தொடர்பான கூட்டங்கள் ஒன்றுதிரட்டப்படுவதனால் இத்தகைய மாற்றங்கள் செய்ய நேரிட்டது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக் கதிர்காம ஆலய மகோற்சவ கால ஆன்மீக தொடர் சொற்பொழிவில் இன்று திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் அ.காந்தரூபன் ''பெரிய புராணம் காட்டும் வாழ்க்கை நெறி'' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (க-08)

## அங்கவீன மாணவரின் உதவிக்கென இசைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சிக்கான நிதிசேகரிக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக 'நெஞ்சோடு பேசும் நிலாஇசை' நிகழ்வு கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6.00மணி தொடக்கம் மறுநாள் அதிகாலைவரை இடம்பெற உள்ளது.

கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஐங்கரன் இசைக்குழு, மற்றும் சித்தாரா இசைக்குழுவினரின் இசை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளது. (க)

## சுதுமலை, ஆனைக்கோட்டை
## காலாவதியான பிஸ்கட்வகைகள் கைப்பற்றப்பட்டன

(சுதுமலை)

சுதுமலை.ஆனைக்கோட்டைப் பகுதிகளில் உள்ளவர்த்தக நிலையங்களில் காலாவதியான பிஸ்கட்டுக்கள் மற்றும் கன்டோஸ் சொக்லேட் வகைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பேக்கரிகள், தேநீர்ச் சாலைகள் போன்றவற்றில் இக்குழு விஜயம் செய்து தேவையான பணிப்புரைகளை வழங்கியதுடன், தரமான உற்பத்திப்பொருட்கள் விநியோகிக்கப்படுவதன் அவசியம் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் சமையலிற்கு பாவிக்கும் மரக்கறிஎண்ணெய், தேங்காய்எண்ணெய் போன்றவற்றிலும் கலப்படம் இடம் பெறுவதாகவும், இதனால் நோய்கள் பலஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் குடும்பப்பெணகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-252)

## மானிப்பாய் நூலகத்தில் திருட்டு முயற்சி

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக நூலகப் பூட்டுக்கள் இனம் தெரியாத திருடர் குழுவினால் உடைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4-ம் திகதி இடம் பெற்ற இச் சம்பவத்தின்போது டத்தகங்கள் மாத்திரமே காணப்படடதால் திருட்டு இடம் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,உயரப்புலம் உந்துங்க விநாயக ஆலயத்தில் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளதென்றும்,எனினும் பொருட்கள் எதுவும் திருடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவங்கள் குறித்து அப்பகுதி மக்கள் பெரிதும் அச்சம் தெரிவித்துள்ளனர்.(க-252)

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை
## 9ம் திகதி முதல் மீண்டும் சொந்த இடத்தில்

(கிளிநொச்சி)

கடந்த 1996ம் ஆண்டு முதல் அக்கராயனில் உள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையுடன் இணைந்து இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நாளை மறுதினம் முதல் மீண்டும் தனது சொந்த இடத்திலேயே இயங்க உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்:

மகப்பேற்று விடுதியைத் தவிர்ந்த இருதய நோயாளர் பிரிவுகள் மற்றும் எக்ஸ்ரே பற்சிகிச்சைப் பிரிவு உட்பட அனைத்து சிகிச்சைப் பிரிவுகளும் கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்திலும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முதலாம் கட்ட மருத்துவனையிலும் இயங்கவுள்ளது.

மகப்பேற்றுப் பிரிவு அக்கராயனில் உள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையிலேயே தொடர்ந்து இயங்கும் என்றும் கிளிநொச்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எனவே தற்போது அக்கராயனில் உள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையுடன் இயங்கிவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் ''கிளினிக்'' மூலம் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் சகலரும் நாளை மறு தினம் முதல் மீண்டும் பழைய இடத்தில் இயங்கிவரும். கிளிநொச்சியில் உள்ள முதலாம் கட்ட மருத்துவ மனையில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்குறிப்பிட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை 1996ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரின் போர் நடவடிக்கையால் பெரும் பாதிப்படைந்து தற்போது மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

## கொளுத்தியெறிந்த வெடி ஒரு வீட்டை பதம் பார்த்தது

(யாழ்ப்பாணம்)

மரண நிகழ்வு இறுதி ஊர்வலத்தின் போது எறிந்த வெடி அருகிலுள்ள வீட்டில் விழுந்து வெடித்ததில் வீட்டின் சமையல் அறை, வைக்கோல்போர் மாட்டுத் தொழுவம் என்பன தீக்கிரையான சம்பவம் அளவெட்டி தெற்குப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டில் சமையல் அறை மற்றும் ஏனைய பகுதிகளே தீக்கிரையாகி உள்ளன. இப்படியான நிகழ்வின் போது இச் செயலில் ஈடுபடுகின்ற இளைஞர்களின் பொறுப்பற்ற தன்மையையே இதற்குக் காரணம என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(க)

## திளசரி தியானம்
### நம்பிக்கை

எப்பொழுதும் நிராசை கொள்ளாதீர்கள். காலையில் வாழ்க்கை நிராசையுடன் ஆரம்பமாகிறது. கடந்து போனவைகளை திருப்பிப் பார்க்காதீர்கள் எப்பொழுதும் நம்பிக்கையுடன் இருங்கள் நம்பிக்கைதான் உங்கள் தோழன். வெற்றி தரும் அன்னை மேலும் பயணத்தை தொடர உதவும் ஊன்றுகோல் நம்பிக்கை. உங்களுக்கு மகிழ்சியைத் தருகிறது. அது உங்களை உன்னதமான மனோநிலைக்கும் புகழின் உச்சநிலைக்கும் கொண்டு செல்கிறது. நம்பிக்கை தான் உங்களை செம்மையாக பணிசெய்ய தூண்டுகிறது உற்சாகம் ஊட்டுகிறது.

சுவாமி சிவானந்தர்

## சிங்கள மொழி பயன்பாடு புதிய குழு அமைப்பு
### அமைச்சர் லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

நிர்வாகத்தின் போதும் தொடர்பு கொள்ளலின் போதும் சிங்கள மொழியைப் பயன்படுத்தும் போதும் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மொழித்திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக நீதி சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரசித்திபெற்ற திறமை வாய்ந்த நிபுணர்கள் பலரும் அங்கம் வகிக்கும் இக்குழுவுக்கு பேராசிரியர் விமல்பீபிலகல்ல தலைமை வகிப்பார்.

பேராசிரியர்களான ஜே.பி. திஸநாயக்கா சுஜரித்த கம்லத், பீ.பி மீகஸ்கும்புர உட்பட பலர் இக் குழுவில் அங்கம்வகிக்கின்றனர். (க-08)

பதவிப் போட்டியில் இழுபறி

# ஸ்ரீ. சு. கட்சி - ஜே. வி. பி சந்திப்பு இடம்பெறவில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் நேற்று முன் தினம் நடைபெறவிருந்த பேச்சுக் கள் நடைபெறவில்லை.எதிர்வரும் வியாழக்கிழமைக்கு அது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.தேசிய அமைப் பாளர் பதவியோ உப தலைவர் பதவியோ தமக்கு வேண்டாமென் றும் நிறைவேற்று அதிகாரங்களுள்ள முன்னணியின் தலைமைப் பதவி அல்லது பொதுச் செயலாளர் பதவி மட்டுமே தமக்கு வழங்கப்பட வேண் டும் என்று ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச லங்கா தீப பத்திரிகைக்கு வழங் கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப் பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சுதந்திரக்கட்சி கைவிட வேண்டும் என்றும்,நோர்வே அனுசரணையாளர் கள் வெளியேற்றப்பட வேண்டு மென்றும் புதிய கோரிக்கைகள் ஜே.வி.பி தரப்பில் முன்வைக்கப் படவுள்ளன,ஆனால் இதற்கு சுதந் திரக் கட்சி உடன் படுவதாக, இல்லை. அது புரிந்துணர்வு ஒப்பந்தத் தைத் திருத்த வேண்டுமென்றும் கூறுகிறது.இதேவேளை,முன்னணியின் தலைமைப் பதவியோ பொதுச் செயலாளர் பதவியோ ஜே.வி.பிக்கு வழங்கப்படும் பட்சத்தில் தாம் முன்னணியிலிருந்து விலகப்போவ தாக ஏனைய இடதுசாரி கட்சிகள் தெரிவிக்கின்றன.

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பட்டி வீரக்கோன்,தேசிய இனப் பிரச்சினை தொடர்பான தெளிவான உடன்பாடு ஏற்படாதவிடத்து தனது கட்சி முன்னணியில் இணையப் போவதில்லை என்று தெரிவிக்கின்றார்.

பதவி தொடர்பாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை உடைப்பதற் கான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சுதந்திரக்கட்சி வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.அதிகார முள்ளஇரண்டு பதவிகளில் ஒன்று தமக்குத் தரப்பட்டேயாக வேண்டு மென்பதில் ஜே.வி.பி விடாப்பிடியாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எமக்குக் கிடைக்க வேண்டிய பாராளு மன்ற ஆசனங்களை நிமால் சிறி பாலடிசில்வா தீர்மானிக்கத் தேவை யில்லை என விமல் வீரவன்ச வெளிப்படையாகக் கூடியுள்ளமை இது தரப்பினருக்குமிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தி வருவதாக வும் தெரிவிக்கபடுகிறது. (த)

# இடைக்கால சபை குறித்து பிரதமர் தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு அனுப்பிவைப்பதற்காக இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பு தொட ர்பான சட்ட வரைபு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான சமா தானப் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசின் குழுவிற்கு தலைமை தாங் கும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் இடைக் கால நிர்வாக சபை சட்ட வரைபு தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந் தனர்.

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸினால் வரையப்பட்டுள்ள இச் சட்ட வரைபு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிற்கு நோர்வே தூதுவர் மூலம் கையளிக்கப்பட வுள்ளது. (வ)

## கூட்டணியின்...

மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து மத்திய குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பலத்த பொலிஸ் பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்ற இக் கூட்டத் தில் கூட்டணிப் பாராளுமன்ற உறுப் பினர்கள் அனைவரும் கலந்து கொண் டனர்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமைப் பதவி தொடர்பாக பலரின் பலவிதமான ஊகங்களுக்கு மத்தி யில் கூட்டணியின் மூத்த உறுப்பி னர் ஆவரங்கால் எஸ். சின்னத்துரை தற்போதைய கூட்டணித் தலைமை யில் முழு நம்பிக்கை இருப்பதாக பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்த போது அது தேவையற்றது எனக் கூறி தற்போதைய தலைமையில் பூரண நம்பிக்கை இருப்பதாக மத்திய குழு உறுப்பினர்கள் தெரி வித்தனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமை உரையில் தமிழர் விடுதலைக் கூட் டணியினர் தனித்துவத்தை ஜனநாயக முறைப்படி பேண வேண்டும் என் பதே எனது உறுதியான ஆசை. இந்நிலையில் விடுதலைப்புலிகளின் கருத்துக்களுக்கும், கோட்பாடுக ளுக்கும் நான் மாறுபட்டவன் அல்ல. அவர்களுடைய கோட்பாடுகளை அனுசரித்து நடக்க வேண்டியது எமது கடமைப்பாடாகும். கட்சியில் உள்ள ஒரு சிலரின் செயற்பாடுகளே என்னை தவறாக வெளிக்காட்டுவதாக அமைந் துள்ளது. தமிழீழ விடுதலைப்புலி களை ஒருபோதும் யுத்தத்தில் வெல்ல முடியாது என்று பாராளுமன்றத்தில் கூறியவனும் நானே என்று ஆனந்த சங்கரி கூறினார்.

கூட்டணியின் செயலாளர் நாய கம் இரா. சம்பந்தன் கருத்துத் தெரி விக்கையில் தமிழீழ விடுதலைப்புலி களைக் கலந்தாலோசிக்காது எத னையும் செய்ய முடியாது. ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து சென் றவர்கள் தமிழீழ விடுதலைப்புலி களே. இந் நிலையில் அவர்களது கோட்பாடுகளை, கருத்துக்களை உதாசீனம் செய்ய முடியாது. வட கிழக்கு இணைந்த தாயகக் கோரிக் கையில் விடுதலைப்புலிகள் உறுதி யாக இருக்கிறார்கள். இதற்கு மாறாக நாம் ஒருபோதும் செயற்பட முடியாது என்றும் கூறினார். (ம)

## தந்தையின்...

நேரத்தில் இளைய மகன் உயிரிழந் தார். இதனை அடுத்து அங்கு குழு மிய பொதுமக்கள் உயிரிழந்த மக னின் தந்தையை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர் இருதார மணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## கரும்புலி...

தலைவர் பிரபாகரன் கரும்புலி மாவீரர்களுக்கு ஈகச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்திய போது விடுதலைப்புலிகளின் அனைத்து கடற்கரும்புலிகளும், களமுனைத் தளபதிகளும் பொறுப்பாளர்களும், போராளிகளும் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தலைவர் பிரபாகரன் முதற்கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப் படத்திற்கு ஏனைய கரும்புலிகளின் படங்களுக் கும் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

இந் நிகழ்வின் போது கடற்புலி கள் பாகம்-6 ஒலிநாடாவை கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை வெளியிட்டு வைக்க தலைவர் பிரபாகரன் பெற்றுக் கொண்டார். இதனை அடுத்து போராளிகளின் இசை நிகழ்வுகளும், இராகவேங்கை இசைக் குழுவின் இசை நிகழ்வும் இடம்பெற்றன. (ம)


## கண்ணீர் அஞ்சலி



**திருமதி வேலுப்பிள்ளை ஈஸ்வரி**

எமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய நண்பர்களான **வே.வரதராசன் க.கோசலா** ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.கருணாநிதியின் மாமியாருமான **திருமதி வேலுப்பிள்ளை ஈஸ்வரி** அவர்கள் 01-07-2003 அன்று அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/6387)

**நண்பர்கள்**
**கனடா**

உங்கள்

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




* புலனாய்வு அதிகாரி கொலை
  சமாதானத்தைக் குழப்பும் சதி
* ஆலடி மாநாடு { அதிபரின் கார் எரிப்பு / பல்கலைக்கழக மாணவன் திருட்டு
* இழுபறியில் இணையும்
  ஜே.வி.பி - ஸ்ரீ.சு.கட்சி கூட்டு
* பண்டாரவளை பிந்துனுவெவ படுகொலை
  குற்றவாளிகள் ஐவருக்கு மரணதண்டனை
* வியாசரின் பதில்
* செங்கை ஆழியானின்
  ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* பொன்.கணேசமூர்த்தியின்
  கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை...)

இன்னும் பற்பல

விலை 14/=

சங்குநாதம்

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில்
ஒலிப்பது


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.